லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-6 இதழ்-5 அக்டோபர்-2017 மாதஇதழ் விலை ₹ 10/-

makkalvisaranai@facebook twitter



## மீண்டும் சினிமாக்காரரர்கள் கையில் தமிழகமா?

# பெறுபவர்களை விட கொடுப்பவர்களே பாக்கியவான்கள்!

**தங்களின் பிறந்த நாள், திருமண நாள், தொழில் தொடங்கிய நாள், முன்னோர்களின் நினைவு நாள், இதர பண்டிகை அல்லது தாங்கள் விரும்பும் நாட்களில்**

# ஆதரவற்ற அன்னையருக்கு அன்னமிட்டு அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றுவோம்

**காஞ்சி மகாப் பெரியவா ஆசியோடு தாங்களும், தங்கள் குடும்பத்தாரும் எல்லா வளமும், நலமும் பெற மனதார பிரார்த்திக்கின்றோம்.** நிராகரிக்கப்பட்ட பெண் முதியோர்களுக்கு அடைக்கலம் அளித்து அவர்களுடைய நலனுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது ஸ்ரீ அவ்வை ஹோம். கடந்த 17 ஆண்டுகளாக ஆதரவின்றியும், நோய்களால் பாதிக்கப்பட்டும், நடக்க முடியாமலும், படுத்த படுக்கையாகவும் உள்ள வயதான அன்னையர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் அனைத்து தேவைகளையும் கருணை உள்ளம் படைத்தவர்களின் ஆதரவோடு இலவசமாக செய்து, தினசரி இறை வழிபாடு, தியானம், திருமுறை பாராயணம் செய்து அவர்களை அன்போடும், அரவணைப்போடும் இறுதிவரை பாதுகாத்து வருகிறோம். எத்தனை வரங்கள் வேண்டுமானாலும் பெற எளிய வழி அன்னதானம் செய்வது மட்டுமே. ஆதரவற்ற அன்னையர்களுக்கு அன்னமிடுவதால் தாங்கள் புண்ணியத்தின் பலனை முழுமையாக பெறுகின்றீர்கள். உதவி செய்யும் நல்உள்ளங்கள் நீடூழி வாழ




தினமும் கூட்டுப் பிரார்த்தனையும், மங்கள பிரார்த்தனையும், அக்னி ஹோத்ரமும் மற்றும் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று காயத்ரி ஹோமமும் நடைபெறுகிறது. ஸ்ரீ அவ்வை ஹோமில் உள்ள ஆதரவற்ற அன்னையர்களும் மகிழ்ச்சியுடன் தாங்கள் விரும்பும் விசேஷ அல்லது பண்டிகை நாட்களை கொண்டாட உங்கள் அன்பளிப்புகளை பொருட்களாவோ, தொகையாகவோ அனுப்பி உதவி செய்திட வேண்டுகிறோம். தங்களின் நன்கொடையால் பயன்பெறும் அனைத்து அன்னையர்களின் ஆசியாலும், வாழ்த்துக்களாலும் தாங்கள் பூரண ஆயுளும், அஷ்ட ஐஸ்வர்யங்களையும் பெறுவீர்கள். மேலும் தாங்களும் குடும்பத்துடன் இந்த இல்லத்தை பார்வையிடலாம்

காப்பகத்தில் நடைபெறும் ஒரு நாள் நித்திய பூஜைக்கு ரூ.200/- அனுப்பும் அன்பர்களுக்கு காயத்ரி வண்ணபடமும், யந்திரமும் அனுப்பி வைக்கப்படும்
ஒரு நாள் காலை உணவுக்கு ரூ.550/- அனுப்பும் அன்பர்களுக்கு ஒரிஜினல் துளசி மாலை அனுப்பி வைக்கப்படும்
ஒரு நாள் மதிய உணவுக்கு ரூ.600/- அனுப்பும் அன்பர்களுக்கு ஒரிஜினல் ருத்ராட்ச மாலை அனுப்பி வைக்கப்படும்
ஒரு நாள் இரவு உணவுக்கு ரூ.500/- அனுப்பும் அன்பர்களுக்கு ஒரிஜினல் நவரத்தின மாலை அனுப்பி வைக்கப்படும்
ஒரு நாள் உணவுக்கு ரூ.1,600/- அனுப்பும் அன்பர்களுக்கு ஒரிஜினல் ஸ்படிக மாலை அனுப்பி வைக்கப்படும்
5 நாள் உணவுக்கு ரூ.5,600/- அனுப்பும் அன்பர்களுக்கு ஒரிஜினல் பவள மாலை அனுப்பி வைக்கப்படும்
10 நாள் உணவுக்கு ரூ.11,000/- அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஸ்ரீகாயத்ரி விக்ரகம் அனுப்பி வைக்கப்படும்
அன்னையர் ஒருவருக்கு ஒரு வருட மருத்துவச் செலவு ரூ.1,400/- அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான தந்வந்த்ரி டாலர் அனுப்பி வைக்கப்படும்
அன்னையர்களுக்கான ஒரு மாத பால் செலவு ரூ.2,000/- அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஸ்ரீஅன்னபூரணி டாலர் அனுப்பி வைக்கப்படும்
அன்னையர்களின் உடைகளுக்கு ரூ.3,000/- அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஸ்ரீகாயத்ரி, ஹயக்ரீவர் டாலர் அனுப்பி வைக்கப்படும்
காப்பகத்தின் ஒரு மாத பராமரிப்பு செலவுக்கு ரூ.4,000/- அனுப்புபவர்களுக்கு வெள்ளியிலான மகாப் பெரியவா, ஆதிசங்கரர் டாலர் அனுப்பி வைக்கப்படும்
ஒரு அன்னையரை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க ரூ.4,400/- அனுப்புபவர்களுக்கு ஒரிஜினல் ஸ்படிக லிங்கம் அனுப்பி வைக்கப்படும்


## தாங்கள் விரும்பும் கோவில்களில் மகாவில்வம் நடுவீர்! மகேசன் அருள் பெறுவீர்!!

## கட்டிட நிதி



சிவனுக்குகந்த மகாவில்வம்

ஆதரவின்றியும், நோய்களால் பாதிக்கப்பட்டும், நடக்க முடியாமலும், படுத்த படுக்கையாகவும் உள்ள எங்களது இல்ல வயதான அன்னையர்களின் உடல்நிலை, மருத்துவ தேவைகளை கருத்தில்கொண்டும், புதிதாக உதவிகேட்டு வரும் ஆதரவற்ற அன்னையர்களுக்கு உதவி செய்ய முடியவில்லை என்பதாலும் எங்களது இல்ல கட்டிடத்தை மேலும் விரிவுபடுத்த உள்ளோம். இதற்கு தங்களால் இயன்ற நிதி உதவிகளை கட்டிட நிதியாக வழங்க அன்புடன் வேண்டுகிறோம். கட்டிட நிதியாக ரூ. 10,000/-க்கு மேல் அனுப்புபவர்களுக்கு சிவனுக்குகந்த மகாவில்வச் செடி ஒன்று தாங்கள் விரும்பும் கோவில்களில் தங்கள் சார்பாக நடப்படும். சிவனுக்கு உகந்த பத்திரங்களில் முதன்மையான இடத்தை பெறுவது வில்வமே. மூவிலை வில்வமே அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால் 5,7,10,15,21 ஆகிய இதழ்களைக் கொண்ட மகா வில்வச் செடிகளும் உண்டு. மகா வில்வதரிசனம் 1008 சிவாலய தரிசனத்திற்கு இணை ஆகும். மகாவில்வம் அனைத்து நோய்களையும் போக்கும் சர்வரோக நிவாரணி, மகாவில்வத்தைத் தொட்டாலும் பார்த்தாலும் வலம் வந்தாலும் உடலுக்கும் உள்ளத்திற்கும் அதீத சக்தி உண்டாகிறது. மகா வில்வம் நடுவதால் குடும்பம் வாழையடி வாழையாக செல்வ செழிப்புடன் திகழவும், ஆரோக்கியம் சிறக்கவும், எண்ணியவை ஈடேறவும், மேலும் இந்த அதீத ஈர்ப்பு சக்தி வாய்ந்த மகா வில்வ இலையால் சிவபெருமானை அர்ச்சிக்கவும் வழிவகை செய்கிறீர்கள். தமிழகத்திலுள்ள அனைத்து பாடல் பெற்ற கோவில்களிலும் எல்லாம் வல்ல இம்மகாவில்வத்தை நட்டு, மகாவில்வத்தாலயே சிவனுக்கு அர்ச்சனை செய்ய வேண்டும் என்பதே எங்களின் நோக்கமாகும். எங்களது இல்லத்திற்கு கட்டிட நிதியை அனுப்பி இக்கிடைத்தற்கரிய மகாவில்வம் நடும் பணியில் தாங்களும் குடும்பத்துடன் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறோம். குடும்பத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டு வெளியேற்றப்பட்ட ஆதரவற்ற அன்னையருக்காக கட்டப்படும் கட்டிடத்திற்கு நீங்கள் அளிப்பது தானமல்ல பரிசு. அதிலும் உயிருள்ள பரிசு.



ஸ்ரீ காயத்ரி ஹோமம்


ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று ஸ்ரீ அவ்வை ஹோமில் கலைமகள், திருமகள் அருளை ஒருசேர வழங்கி அஷ்ட ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் சகல தேவதா ஸ்ரீ காயத்ரி ஹோமம் மற்றும் சிறப்பு ஐஸ்வர்ய கலச பூஜையும் நடைபெறும். இதில் தாங்கள் பங்கு பெற சங்கல்ப கட்டணம் ரூ. 300/- மட்டுமே. நீண்ட ஆயுள், சகல காரிய வெற்றி, நிலம்/வீடு வாங்குவதற்கும், திருமாங்கல்யம்/மழலை பாக்கியம், வியாபாரத் தடைகளைப் போக்கி சர்வ மங்கலமும், லக்ஷ்மி கடாட்சமும் கிடைக்கச் செய்கிறது. தங்கள் பிரார்த்தனைகளுக்கு ஏற்ப தனித் தனியாக ஹோமத்தில் சங்கல்பம் செய்து, ஹோம பிரசாதத்துடன் ஸ்ரீகாயத்ரி யந்திரம் மற்றும் ஜெப மாலை அடங்கிய சிடியும், ஸ்ரீகாயத்ரி ரக்ஷை மற்றும் ஹோம பஸ்பமும் அனுப்பி வைக்கப்படும்

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் தங்களுடைய பிரார்த்தனைகளையும், கோத்ரம், ராசி, நட்சத்திரத்தையும் மற்றும் முகவரி, தொலைபேசி எண்களை தெளிவாக குறிப்பிட்டு கீழ்க்கண்ட முகவரிக்கு **CHEQUE/ DD/MO** மூலமாக **SRI AVVAI HOME, CHENNAI** என்ற பெயருக்கு அனுப்ப வேண்டுகிறோம். நன்கொடை அனுப்பும் அனைவருக்கும் காயத்ரி ஹோமத்தில் சங்கல்பம் செய்து பூஜிக்கப்பட்ட மேற்கண்ட பொருட்களும், பிரசாதங்களும், ரசீதும் அனுப்பி வைக்கப்படும்



உரத்த சிந்தனை பத்திரிக்கை அன்பர்கள் ஸ்ரீ அவ்வை ஹோம் இல்ல பெண் முதியவர்களுடன் தீபாவளி கொண்டாடி மகிழ்ந்தபோது

தங்களின் பிறந்த நாள், திருமண நாள், தொழில் தொடங்கிய நாட்கள், முன்னோர்களின் நினைவு நாட்கள், அமாவாசை, பௌர்ணமி, கிருத்திகை மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் அன்னையர்களுக்கு நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடையினால் அவர்களின் இதயங்களிலிருந்து வரும் நல்வாழ்த்துக்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் என்றும் வாழ வைக்கும்



மகாப் பெரியவா ஆசியோடு 17 ஆண்டுகளாக ஆதரவற்ற அன்னையரை ஆதரித்து, அரவணைக்கும் ஆனந்தம் தரும் அன்பு இல்லம்

AVVAI HOME IS THE POWER HOUSE OF DIVINE ENERGY

# ஸ்ரீ அவ்வை ஹோம்

குன்றத்தூர் முருகன் கோயில் அடிவாரம், குன்றத்தூர், சென்னை-69

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

Off: 8754 888 888
Home: 8754 999 999
www.sriavvaihome.com

**தலைக்கட்டும் உங்கள் தலைமுறை! மகிழ்ச்சியும், செல்வமும் மேன்மேலும் பெருகட்டும் உங்கள் இல்லங்களில்!!**

# தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

# பதவி சண்டையால் பரிதவிக்கும் தமிழகம்?

இந்த அரசியல் குழப்ப நிலை அரசு நிர்வாகத்தின் பல மட்டங்களிலும் எதிரொலிக்கிறது என்று பதறுகிறார்கள் மக்களும் சமூக ஆர்வலர்களும். அதிமுக எம்.எல்.ஏ.க்களையே கட்டுப்பாட்டில் வைத்திருக்க வழியில்லாத நிலையில், அரசு அதிகாரிகளிடம் வேலை வாங்கும் திறனை முதல்வரிடம் எதிர்பார்ப்பது நியாயம் இல்லைதான். ஆனால், அதன் விளைவுகள் மக்கள் மீதுதான் விடியும் எனும்போது எத்தனை நாட்களுக்கு இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருப்பது?

மிக முக்கியமாக, தொழில் முதலீடுகளை இழந்து நிற்கும் அபாயத்தில் தமிழகம் இருக்கிறது. பல முதலீட்டாளர்கள் தமிழகத்துக்கு வெளியே தங்கள் கவனத்தைத் திருப்பத் தொடங்கியிருக்கிறார்கள். ஆந்திரமும் தெலங்கானாவும் தமிழகம் தவறவிடும் தொழில் வாய்ப்புகளைக் கொத்திக் கொண்டுபோகக் காத்திருக்கின்றன. தமிழக ஆட்சியாளர்கள் மீது ஊழல் புகார்களை நடிகர் கமல்ஹாசன் உள்ளிட்டோர் பகிரங்கமாக முன்வைத்துவரும் நிலையில், இந்தியா முழுவதும் சந்திசிரிக்கிறது தமிழகத்தின் நிலை.

அடிப்படைக் கட்டுமானம் தொடங்கி மக்கள் நலத் திட்டப் பணிகள் வரை முடங்கிப்போயிருக்கின்றன. குறைந்தபட்சம் எய்ம்ஸ் மருத்துவமனைக்கான இடத்தைக்கூட மாநில அரசால் தேர்வு செய்துத்தர முடியவில்லை. துணை நகரத் திட்டப் பணிகள் தொடங்கி சமீபத்தில் அறிவிக்கப்பட்ட நீர்நிலைகள் தூர்வாரும் திட்டம் வரை சரிவர நிறைவேற்றப்படவில்லை.

போன முறை நிர்வாகம் ஸ்தம்பித்துப்போயிருந்த சூழலில் பெருமழை - வெள்ளத்தில் சென்னை மூழ்கி வெளியே வருவதற்குத் திண்டாடியது. இன்னொரு முறை அப்படி நிகழ்ந்தாலும் செயலாற்றுவதற்கு நிர்வாகம் சிறிதும் தயாராக இல்லை என்பதுதான் உண்மை. மொத்தத் துறைகளும் முடங்கிக் கிடக்க, கல்வித் துறையில் மட்டும் நம்பிக்கையூட்டும் சில அறிவிப்புகள் வெளியாகின. ஆனால், அந்த சந்தோஷமும் நிலைக்கக் கூடாது என்று கல்வித் துறைச் செயலாளரின் அதிகாரம் குறைக்கப்பட்டு அவர் ஓரங்கட்டப்பட்டிருக்கிறார்.

இதோ, பாஜக ஆதரவுடன் ஒவ்வொரு நாளும் ஆடுபுலி ஆட்டம் ஆடியே ஐந்தாண்டுகளைக் கடத்திவிடலாம் என்று 'செயல்பட்டு'க்கொண்டிருக்கிறது தமிழக அரசு. அதன் ஒவ்வொரு நடவடிக்கையையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் மக்கள். இப்படியான ஆட்சியாளர்கள் தேர்தல்களில் பெரும் தோல்வியைச் சந்திப்பார்கள் என்பதுதான் வரலாறு. அதுமட்டுமல்ல, வரலாற்றின் பக்கங்களிலிருந்தும் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்படுவார்கள் என்பதையும் காலம் அவர்களுக்கு நிச்சயம் உணர்த்தும். சசிகலா தரப்பால் மிரட்டப்பட்டு ராஜிநாமா செய்ததாகச் சொல்லி ஜெயலலிதா சமாதியில் அமர்ந்து 'தியானம்' செய்தபோது பன்னீர்செல்வத்துக்கு மக்கள் மத்தியில் உருவான ஆதரவு அலை இன்றைக்கு எங்கே போனது? இந்த உண்மையை முதல்வர் பழனிசாமி உணர வேண்டும். அதுமட்டுமல்ல, மக்கள் வேடிக்கை பார்க்க இன்னும் அதிக நாட்கள் தங்கள் வேடிக்கைகளை நிகழ்த்த முடியாது என்பதை பழனிசாமியும் ஓ. பன்னீர்செல்வமும் புரிந்துகொண்டே ஆக வேண்டும்!

நீதிமன்றத்தின் மூலமே காலம் தாழ்த்திவிடலாம் என்று கணக்குப் போட்டால் மக்கள் மன்றத்தில் மண்ணை கவ்வ வேண்டியதுதான். இனியாவது மக்கள் சேவையை சரியாக செய்யுங்கள்.

- முனைவர் **ஆ. மவுரியன்,**
ஆசிரியர்

உயர்ந்து வரும் ஊராட்சி நிலைகளில் மிகவும் கீழ் நிலையில் உள்ள ஊராட்சியாக படூர் ஊராட்சி விளங்கு கிறது. மக்கள் தொகை பெருகிவரும் கால கட்டத்தில் மக்களுக்கான அடிப்படை வசதிகள் இல்லாதது மிகவும் வேதனைக் குரிய விஷயமாக உள்ளது.

உதாரணத்திற்கு

அண்மையில் நிலவுகின்ற கொடிய நோயான டெங்கு, மலேரியா போன்ற நோய்களை குணப்படுத்துவதற்கு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை.

கிராம அலுவலகம் (வி.ஏ.ஒ) இருந்தும் அதில் பணிபுரிய பணியாளர்கள் இல்லை. சுமார் பதினைந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் இந்த ஊராட்சியில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு எந்த ஒரு தேவை என்றாலும் ஊராட்சியை விட்டு வெளியே செல்ல வேண்டிய நிலை உள்ளது. வெளியே செல்வதற்கு பேருந்துகள் இருந்தும், பேருந்து நிறுத்தம் இல்லாமல் அவதிப்படு கின்றனர்.

மழைக் காலங்களில் மழை நீரை சேமித்து வைப்பதற்கு மழைநீர் வடிகால் வாரியம் வசதி இல்லை. மழை காலங்களில் சுமார் 3 அல்லது 4 கிராமங்களில் இருந்து வரும்



ஏரி நீர் படூர் பகுதிகளில் உள்ள பக்கிங்காம் கால்வாய் வசதியாக சென்றடைய வேண்டும். ஆனால் அதற்கு வழி இல்லை. ஏரி நீர் வெள்ள பெருக்கால் கிராம வசிப்பிடத்தில் புகுந்து விடுகிறது. இதற்கு கிராம அலுவலர்களோ, அரசாங்க அதிகாரிகளும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

படூர் ஊராட்சிக்கு சொந்தமான பல ஏரிகள். குளங்கள் பல பேர்களால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகின்றது. இதற்கு காரணம் என்ன, யாரோடு உத்தரவின் பேரில் ஏரிகள், குளங்கள் ஆக்கிரமிப்புக்குள்ளாகின்றன.

அனைத்து ஊராட்சிகிளலும் அரசாங்க சமுதாய நலக்கூடம் உள்ளது. படூர் ஊராட்சி யில் எங்கே?




# படூர் ஊராட்சியின் இந்த நிலை மாறுமா? மாறாதா?





கழிவு நீர் கால்வாய் வசதி இல்லை. இதனால் கழிவுநீர் குடிப்பதற்கு பயன்படுத்தும் ஏரிகளிலும், ஆறுகளிலும் கலக்கப்படுகிறது. இதனால் கிராம மக்கள் பல வகையான நோய்கள் தொற்றுக்கு ஆளாகின்றனர்.

படூர் ஊராட்சிக்கு குப்பை கிடங்கு எங்கே? குப்பை கிடங்கு இல்லாததால் குப்பைகளை சாலையில் வீசி செல்கின்றனர். கடைகள் வைத்திருக்கும் வியாபாரிகளும் குப்பைகளை சாயையில் வீசுகின்றனர். இதற்கு கண்டிப்பாக படூர் ஊராட்சிக்கு குப்பைக் கிடங்கு வேண்டும்.

ஊராட்சியில் சாலை வசதிகள் இல்லை. சாலையில் எங்கு பார்த்தாலும் குண்டும் குழியுமாக காணப்படுகிறது. மக்கள் அரசாங்கத்திற்கு சாலை வரி, வீட்டு வரி, வாகன வரி போன்ற வரிகளை செலத்தினாலும், அரசாங்கம் மக்களுக்கு செலுத்துகின்ற வரி மரண வரியாகவே உள்ளது. இந்த நிலைமை இன்னும் தொடருமா? இதற்கு முடிவு உண்டா? இதற்கு என்ன காரணம்?

படூர் ஊராட்சிக்கு சொந்தமான சுடுகாடு மற்றும் இடுகாடு சரியாக பராமரிப்பு செய்யப்படுவதில்லை. எங்கு பார்த்தாலும் முட்புதர்கள், குப்பை கூலங்களாக காணப்படுகின்றன.



படூர் ஊராட்சிக்கு சொந்தமான அரசு நிலங்கள் (புறம்போக்கு நிலம்) எங்கே? யாரால் திருடப்பட்டது? இதற்கு யார் காரணம்? உரியவர்களிடமிருந்து அரசு நிலங்களை மீட்டு ஊராட்சியில் பல காலமாக சொந்த நிலமில்லாதவர்களுக்கு சரி சமமாக பிரித்து தருவதற்கு அரசாங்க அதிகாரிகள் முன் வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். படூர் ஊராட்சி முழுவதும் உள்ள சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட வேண்டும்.

கிராம ஊராட்சியில் வரி கணக்குகளை 23-10-16 அன்று முதல் இன்று வரை சரிவர சமர்ப்பிக்கப்படவில்லை. பல அடுக்குமாடி குடியிருப்புகள், பல கல்லூரிகள், பல தனியார் நிறுவனங்கள் இவைகளுடைய தனித் தனி பஞ்சாயத்து வரியின் கணக்கு வழக்குகளின் நிலை என்ன?

இதற்கு முன் இருந்த கிராம தலைவர்கள் மூலமாக பல நலத்திட்டங்கள் நடந்துள்ளது. இன்று சிறப்பு அதிகாரிகளில் கையில் உள்ள பதவியால் இந்த ஊராட்சிக்கு எந்த ஒரு நல்லதும். நல்ல செயல்பாடும் சரிவர செயல் பட வில்லை.

இதற்கு தமிழ்நாடு காஞ்சிபுரம் மாவட்டம் ஆட்சியாளரும் மதிப்பிற்குரிய தமிழ்நாடு முதல்-அமைச்சர் அவர்களும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று படூர் ஊராட்சியின் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**நடவடிக்கை எடுக்குமா தமிழக அரசு?**

**- சிவராமன்**



# மீண்டும் சினிமாக்காரர்கள் கையில் தமிழகமா?

பட்டதாக வந்த தகவல்கள் போன்றவை கமல்ஹாசனை முழுநேர அரசியல் நோக்கர்களில் ஒருவராக மாற்றிவிட்டது, காலத்தின் கட்டாயம் என்றே கருத வேண்டியுள்ளது.

குறிப்பாக, கமல்ஹாசன் அரசியல் என்னும் ஆழ்கடலுக்குள் குதிக்க துணிந்துவிட்டார்

நான் எப்போ வருவேன் - எப்படி வருவேன்னு தெரியாது. ஆனா.., வர வேண்டிய நேரத்திலே கரெக்ட்டா வருவேன் என்ற ரஜினிகாந்தின் சினிமா வசனம் விரைவில் மெய்ப்படும் நேரம் நெருங்கிவிட்டதாக தமிழக மக்களில் ஒருதரப்பினர் கருதத் தொடங்கி யுள்ளனர்.

'அரசியல் என்னும் புதைக்குழிக்குள் கால் வைத்து சிக்கிக் கொள்ள மாட்டேன்' என்று ஒதுங்கிப்போய் கலைத்துறையில் தனது வல்ல மையை பதிவு செய்வதில் மட்டும் அக்கறை காட்டி வந்த கமல்ஹாசன், வர்தா புயல் பாதிப்பின் போது தமிழக அரசுக்கு எதிராக முதன்முறையாக குரல் எழுப்பினார்.

அந்நாள் முதலமைச்சர் மறைந்த ஜெயலலிதா வின் மனம் கமலின் விமர்சனத்தால் எந்த அளவுக்கு புண்பட்டிருக்கும்? என்பது கமலின் மீது அப்போது அறிக்கைப் போர் தொடுத்த இந்நாள் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல் வத்தின் சுடுமொழிகள் இன்றளவும் கமல் ரசிகர் களின் மனங்களில் நீறுபூத்த நெருப்பாக - மவுன மான எரிமலையாக புகைந்து கொண்டிருக்கிறது.

ஜல்லிக்கட்டு விவகாரத்தில் தமிழர்களின் உரிமைக்காக கமல் எழுப்பிய போர்க்குரல், நீட் தேர்வை எதிர்த்துப் போராடி, அகால மரணம் அடைந்த அரியலூர் மாணவி அனிதாவின் மரணம், அ.தி.மு.க.வில் ஓ.பி.எஸ். - இ.பி.எஸ். - தினகரன் அணி எம்.எல்.ஏ.க்கள் விலை பேசப்

என்பது ஓரளவுக்கு உறுதியானவுடன் ஆளும் கட்சி தரப்பினர் 'கட்சி தொடங்கி அரசியலுக்கு வந்தால் கமலுக்கு தக்கபடி பதில் அளிப்போம்' என்று தற்காப்புக்காக கூறிய பதில்மொழியும், 'முதல்-அமைச்சர் பதவி என்பது மூர் மார்க்கெட்டில் விற்கும் பொம்மை அல்ல' என்று அமைச்சர் ஒருவர் கூறிய கருத்தும், கரையோர அலையாக அரசியல் என்னும் ஆழ்கடலின் பக்கம் கமலை இழுத்துச் சென்றது என கருதலாம்.

தொடர்ந்து, ஆட்சியில் ஊழல் வியாபித்துள் ளதாக அவ்வப்போது சுட்டிக்காட்டி வருவதை யும், தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு உள்பட பல்வேறு முக்கிய பிரச்சனைகள் தொடர் பாக கமலின் டுவிட்டர் பதிவுகளும், ஒருசில நிகழ்ச்சிகளில் அவர் பேசிய பாங்கும், ஊடகங் களுக்கு அளித்த பேட்டியும், நான் அரசியலில் தான் இருக்கிறேன் என கமல் வெளிப்படையாக தெரிவித்த கருத்தும் எம்.ஜி.ஆர்., விஜயகாந்த், சரத்குமார் வரிசையில் மற்றொரு 'அரசியல் ஹீரோ' உருவாகி விட்டார் என்பதை உறுதிப் படுத்தியது.

தி.மு.க. சார்பில் நடைபெற்ற முரசொலி பவளவிழா நிகழ்ச்சியில் தமிழகத்தின் பத்திரிகை யாளர்களுடன் மேடையை பகிர்ந்துகொண்ட கமல் ஒரு நடிகராகவோ, பத்திரிகையாளராகவோ பார்வையாளர்களின் கண்களுக்கு தெரிய வில்லை. மாறாக, தேர்ச்சிபெற்ற ஒரு அரசியல் கட்சி தலைவராகவே அவர் தோன்றினார்.

ஓணம் பண்டிகையையொட்டி கேரள முதல் மந்திரியுடன் சந்திப்பு, டெல்லி முதல் மந்திரி அரவிந்த் கெஜ்ரிவாலுடன் சந்திப்பு என தனது அரசியல் பயணத்தின் துவக்கத்துக்கான சிலவற்றை பகிரங்கமாகவே செய்து வந்தாலும், தனது நெருங்கிய நண்பர் ரஜினிகாந்துடன் சில ரகசிய சந்திப்புகளை நடத்திய கமல், ஊழலை எதிர்ப்பதில் எனக்கும் ரஜினிகாந்துக்கும் ஒரே நிலைப்பாடுதான் என்பதை தெள்ளத்தெளிவாக போட்டுடைத்தார்.

'எனது நிறம் காவியல்ல' - என்ற கமலின் கருத்துக்கு பதிலடியாக பா.ஜ.க.வின் தமிழக தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் 'பச்சோந்தி களுக்கு நிறமில்லை' என்று கூறியதும் 'சபாஷ்.. சரியான போட்டி' ஆக அமைந்திருந்தது.

தமிழக அரசியலில் இதைப்போன்ற சரவெடிகள் தொடர்ந்தால் இந்த தீபாவளி அமர்க்களமாக அமையும் என்ற எதிர்பார்ப்பு தமிழக மக்களிடையே மேலோங்கியது.

மக்கள் விரும்பினால் தமிழகத்தின் முதலமைச்சர் ஆவதற்கு விருப்பம் உண்டு என்று சுற்றிவளைக்காமல் நெற்றியடியாக கமல் வெளியிட்ட கருத்தும், கட்சியின் பெயர், கொடி, சின்னம் போன்றவற்றை உருவாக்கும் பணிகளில் அவர் காட்டிவரும் மும்முரமும் வரும் தைத்திங்களுக்குள் தமிழக அரசியலில் ஒரு சர்க்கரைப் பொங்கல் படையல் காத்திருக்கிறது என்பதற்கான அச்சாரமாக தெரிகிறது.

வரவே மாட்டேன் என்ற கமல்ஹாசன் அரசியலின் பக்கம் பார்வையை பதியவைத்து விட்டார். வர வேண்டிய நேரத்தில் கரெக்ட்டா வருவேன் என்ற ரஜினிகாந்தின் வசனத்தை பொய்யாக்க விரும்பாமல் எனது அரசியல் பயணத்தில் ரஜினியும் வந்தால் இணைத்துக் கொள்வேன் என ஆன்மிகவாதியான தனது நண்பரின் அரசியல் பிரவேசத்துக்கும் நாத்திக ரான கமல் பிள்ளையார் சுழி போட்டு விட்டார்.

அதற்கேற்ப, பிரதமரின் தூய்மை பாரதம் திட்டத்தை ஆதரிப்பதாகவும் தனது ரசிகர்கள் இதில் இணைந்து செயல்பட வேண்டும் எனவும் ரஜினிகாந்த் வெளியிட்ட கருத்து 'ஒன்னும் ஒன்னும் ரெண்டு' என்பதை இலைமறைவற்ற காயாக வெளிகாட்டியது.



அடுத்தகட்டமாக, நான் ஒரு நாத்திகவாதி. எனது கொள்கைகளும், ரஜினிகாந்தின் கொள்கைகளும் வெவ்வேறானவை. பா.ஜ.க.வில் இருக்க தகுதியானவர் என்று ரஜினிக்கு கமல் அளித்த சான்றிதழ் அவரது தேசியத்தையும், ஆன்மிகத்தையும் சுட்டிக்காட்டியதாகவே நேற்றுவரை தமிழக மக்கள் நினைத்திருந்தனர்.

ரஜினிகாந்தின் இத்தனைக்கால காத்திருப் புக்கும் - கமலின் திடீர் அரசியல் பிரவேசத்துக் கும் தமிழக சட்டசபை தேர்தல் என்ற முகூர்த் தநாளில் கல்யாணம் நடத்த ரகசிய காய்நகர்த்தல் தற்போது தொடங்கிவிட்டதாக விபரமறிந்த வட்டாரங்களால் யூகிக்க முடிகிறது.

அதாவது, கமலின் தனிக்கட்சி வரும் ஜனவரி மாத துவக்கத்தில் செயல்பட தொடங்கிவிடும். அதற்குள் பா.ஜ.க.வுக்குள் ரஜினிகாந்த் எப்படியும் சங்கமம் ஆகிவிடுவார்.

**அப்படி, பா.ஜ.க. என்னும் மிகப்பெரிய கட்சிக்கு செல்லும் ரஜினிகாந்துக்கு தமிழ்நாட்டில் கூட்டணி உள்பட அக்கட்சியின் செயல்பாடுகளில் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட பெரிய பதவி உடனடியாக கிடைக்கலாம்.**

**- ஆ.மவுரியன்**

# திருவண்ணாமலையில்

திருவண்ணாமலை மாவட்டத்தில கொஞ்சம் காலமாகவே கொலை, கொள்ளை, வன்முறை, வெட்டுக் குத்து, கொலை வெறித்தாக்குதல் போன்ற நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் புதியதாக பொறுப்பேற்றிருக்கும் வட்டாட்சியர் கந்தசாமி என்பவர் சிறப்பாக மாவட்ட நிர்வாகத்தை கவனித்து வருவதாக அறிந்தோம்.



சீனுவாசன்



தீபன்ராஜ்குமார்

# தொடரும் வன்முறை

சில தினங்களுக்கு முன்பாக இவரையே சில வெறியர்கள் தாக்குதலுக்கு முற்படும் போது காவல்துறையினர் உதவியில் மாவட்டாட்சியர் தப்பித்து இருக்கிறார்.

குற்றவாளிகளை கைது செய்து விசாரித்த போது ஆள் மாறாட்டம் என தெரிய வந்திருக்கிறது. பாதுகாப்பு வளையத்தில் இருக்கும் மாவட்டாட்சியருக்கு இதேபோன்று சோதனை என்றால் சாதாரண மக்கள் படும்பாடு சொல்லவா வேண்டும்?

திருவண்ணாமலை தேரடி வீதியில் நகைக் கடை ஆச்சாரி கடை வைத்து தொழில் செய்து வரும் 1) கண்ணன் (எ) துரை ஆச்சாரி த./பெ. ராஜமாணிக்கம், 2) சீனிவாசன் த./பெ. கண்ணன், 3) தீபன்ராஜ்குமார் த./பெ. சீனிவாசன் ஆகிய மூவருக்கும் 03-07-2017 அன்று இரவு 11.20 மணிக்கு நமச்சிவாயம், பச்சையப்பன் மற்றும் இவர்களுடன் 15 பேர் கொண்ட கும்பல் கொலை வெறித் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்.

என்ன காரணம் என்று விசாரித்தபோது



காம்பவுண்டு சுவர் பிரச்சனை புகாரின் அடிப்படையில் காவல்துறை கைது செய்திருக்கிறார்கள். அப்படியிருக்கும் சீனிவாசன் இவர் மகன் தீபன்ராஜ்குமார் இவர்களுடன் புகைப்படத்தை பார்த்தால் புரியும் வன்முறை தன்மை எப்படி என்று?

எந்தப் பிரச்சனை என்றாலும் நீதிமன்றத்தை அணுகி நியாயத்தை எதிர்பார்க்கும் ஆட்கள் குறைந்து விட்டார்கள். அதனால்தான் வன்முறை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

வன்முறையாளர்களுக்கு சட்டத்தின் மீது உள்ள அச்சம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டுதான் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் நம் அரசியல் அமைப்புச் சட்டம் இன்று ஜெயில்! நாளை பெயில்.!!

இந்நிலை நீடித்தால் வன்முறை எப்படி குறையும். மாவட்டாட்சியர் காரணத்திற்கு கார்த்திகை தீபம் நடக்கயிருக்கும் சமயம் இதுபல இலட்சம் பக்தர்கள் வர இருக்கும் சமயம் எந்த வன்முறையும் நடக்காமல் இருக்க முன்னேற்பாடு செய்தால் வன்முறை குறையும்.

ஆரணி வட்டம் அதே திருவண்ணாமலை மாவட்டம்தான் இ.பி.நகர் சேவூர் கிராமத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கிராம அதிகாரி வி. பச்சையப்பன் த./பெ. வெள்ளை என்பவர் எங்கள் மக்கள் விசாரணைக்கு புகார் கடிதம் எழுதியிருந்தார். படித்ததும் மிகவும் கவலையுற்றேன்.

சேத்துப்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் இவர் புஞ்சை நிலம் பட்டா மாறுதல் தொடர்பாக ஓர் ஆண்டாக அலைக்கழிக்கப்படுவது தெரிகிறது. ஒரு வருவாய் துறையில் பணியாற்றிய இவருக்கு இந்த நிலை என்றால் சாதாரண பொதுமக்களுக்கு என்ன நிலை பாருங்கள். இவரின் பிரச்சினை என்னவென்று பார்ப்போம்..

இந்த ஓய்வு பெற்ற கிராம அதிகாரி பச்சையப்பன் என்பவரின் மனைவி திருமதி. பாரதி என்பவருக்கு சேத்துப்பட்டு கிராமத்தில் புஞ்சை சர்வே எண். 44/5பி 1-ல் 0.03.0 ஏர்ஸ் நிலத்தின் உட்பிரிவு செய்து 44/8 0.03.0 ஏர்ஸ் பட்டா எண். 624 19.11.2001 அன்று மாறுதல் செய்யப்பட்டு வட்ட துணை ஆய்வரிடம் ஒப்பம் செய்து பட்டா வழங்கியிருக்கிறார்கள்.

தற்பொழுது கணினி மயமாக்கப்பட்டதால் கணினி பட்டா வழங்க கோரி 09-11-2016 அன்று வட்டாட்சியருக்கும் 19-12-2016 அன்று கோட்டாட்சியருக்கும் மனு செய்திருக்கிறார். செய்யார் ஆர்.டி.ஓ. இவருக்கு கணினி பட்டா வழங்க உத்திரவிட்ட பிறகும் இன்னும் கணினி பட்டா வழங்கப்படாமல் பந்தாடப்பட்டு வருகிறார். மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்கும் ஓய்வு பெற்ற கிராம அதிகாரி பச்சையப்பனுக்கு நியாயம் கிடைக்குமா?



**ஓய்வு பெற்ற கிராம அதிகாரி பச்சையப்பன்**

இதுவும் ஒரு வகையில் வன்முறைதான்! பொதுமக்களை மன உளைச்சலுக்கு ஆளாக்குவது!

சேத்துப்பட்டு வட்டாட்சியர் என்ன எதிர்பார்க்கிறாரோ. இவர் எதிர்பார்ப்பதை திருவண்ணாமலை மாவட்டாட்சியரும் மாவட்ட வருவாய் அலுவலரும்தான் கொடுக்க வேண்டும். ஓய்வு பெற்ற கிராம அதிகாரி பச்சையப் பனுக்கு கணினி பட்டா கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

**- ஆ.தே.முருகையன்**

# ஏன்? எதற்காக?




இந்தியாவின் செல்வங்களையும், அறிவு வளங்களையும் ஆராய்வதற்காக ஸ்பெயின் நாட்டு உதவியுடன் கடல் மார்க்கமாக இந்தியாவை அடைய பயணம் மேற்கொண்ட கொலம்பஸ் ஏதோச்சியமாக கண்டுபிடிச்ச நாடுதான் அமெரிக்கா. நம்மை தேடி வந்தவர் கண்டுபிடித்த நாடுதான் அமெரிக்கா வல்லரசு. ஆனால் நாம் ஏன் இன்னும் வல்லரசு ஆக முடியவில்லை. இது மட்டும் தவுசண்ட் டாலர் கேள்விகளாக இருக்கிறது.

இந்திய மூளைகள் அந்நிய நாட்டை வளப்படுத்தவே நம் நாடு தயாராகிறது. சிந்திக்கிறது. செயல்படுகிறது. இது சுய பரிசோதனை செய்ய வேண்டிய கால கட்டமாகும்.

தொலை தொடர்பு முன்னேற்றம்
மக்கள் தொகை முன்னேற்றம்
வறுமை முன்னேற்றம்
வறட்சி முன்னேற்றம்
சாதிக்கட்சிகள் முன்னேற்றம்
படிக்காதவர்கள் ஆட்சி முன்னேற்றம்
விலைவாசி உயர்வால் முன்னேற்றம்
பொருளாதார வீழ்ச்சியில் முன்னேற்றம்
ஓட்டுகளை பாமரர்களிடம் இருந்து
லஞ்சம் கொடுத்து பிடுங்குவதில் முன்னேற்றம்
விவசாயிகள் ஒழிப்பு விவாசயிகள் அழிப்பு முன்னேற்றம்
இப்படித்தான் நாடு நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது.

துபாயை பாருங்கள் இந்தியர்கள் இல்லை என்றால் துபாய் இல்லை. தலைமை பணியில் இருந்து துப்புரவு பணி வரை இந்தியர்கள்தான். ஒப்பந்ததாரர்கள் இரவு பகலாக தன் வேலையை செய்து முடிக்கிறார்கள்.

சட்டசபை விவாதம், பாராளுமன்ற விவாதம், கல்லூரி மாணவர்கள் சபை விவாதம் செய்ய வேண்டும். பாமர மன்றம் விவாதம் தெரிந்து அறிக்கை தர வேண்டும், சட்டம் பழைய பஞ்சாங்கமாக இருக்கிறது. அது புதுவடிவம் பெற்று நாடு நவினத்துவம் அடைய வேண்டும். ஆண்டிக்கும், அரசனுக்கும் சட்டம் ஒன்று என்ற நிலை ஏற்பட வேண்டும்.

பணம் மட்டுமே மனிதனையும், நாட்டையும் ஆட்சி செய்கிறது. மனிதாபிமானம் செத்துவிட்டது, தனியார் கல்விக்கு ஈடாக அரசு கல்வியில் முன்னேற்றம் வேண்டும்.

கடந்த 20 ஆண்டுகள் இடைவெளியில் விலைவாசி ஏற்றம் விண்ணைத் தொட்டுக் கொண்டு இருக்கிறது. ரிலையன்ஸ், மோர் பார் யு, வால்மார்ட் போன்ற கார்ப்பரேட் அந்நிய நிறுவனங்களால் விவசாயம் சிறு தொழில்கள்

திவாலாகிவிட்டன. ஒரு பக்கம் மாதம் 30 ஆயிரம் ரூபாய் சம்பாதிப்பவனுக்கும் மாதம் 3 ஆயிரம் சம்பாதிப்பவனும் கிலோ தக்காளி 15 ரூபாய்தான். இதில் மட்டும் ஏன் ஓர வஞ்சனை, சராசரி குடிமக்கள் அதிகம் வாழும் நம் நாட்டில் 30 சதவீதம் பேர் லட்சாதி பதிகளும் கோட்டிஸ் வரர்களுமே சட்டத்தை வளைத்து அரசியல் சாசனத்தை துவைத்து ஈசியாக உயரத்துக்கு போய்விடுகிறார்கள். இவர்களுக்கு ஒரே நாடு, ஒரே வரி எப்படி சாத்தியமாகும்? இதில் ஆவேசப்படுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்.

அரசு திட்டமாக வடிவம் பெற குறுகிய காலத்தில் முடிக்க முடியும். பெருந்தொகை கொண்ட டெண்டர்களை பத்து பேருக்கு பிரித்துக் கொடுங்கள். அரசு பணி நிறைவாக தூய்மையாக, செய்து முடிப்பார்கள். இதில் அரசுக்கு மட்டுமல்ல மக்களுக்கும் நன்மை கிடக்கும். ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி மாற்றம் வரும் என்பதால் எல்லாத்தையும் கிடப்பில் போட்டு விடுகிறார்கள்.

அரசுக்கும் மக்களுக்கும் மிகுந்த நஷ்டத் தையும் கெட்டப்பெயரையும் ஏற்படுத்தி விடுகிறார்கள்.

தீய வழியில் பணம் சம்பாதிப்பவனுக்கு நாட்டில் அந்தஸ்து கொடுக்கும் அநியாகக் காரர்களைத் தண்டிக்கனும், "வாழத் தெரியாத வர்கள் வாழும் நாட்டில் ஆளத் தெரியாத வர்கள் ஆட்சிக்கு வருவார்கள்" அதுதான் நடந்துகொண்டு இருக்கிறது.

சமூக குற்றம் குறைய சீர்திருத்தம் தேவை. அழிவது உடல், அழியாதது ஆத்மா என்று உணரும்போது மனதளவில் தவறு செய்ப வனுக்கு உடலுக்கு மட்டும் தண்டனைக் கொடுப்பது தவறு. மனதுக்கும் தண்டனை கொடுக்க வேண்டும். கோடி கோடியாய் இந்திய பணத்தை ஏமாற்றியவனையும் கண்டெய்னர் கண்டெய்னராக கொள்ளை யடித்தவனையும் இன்றளவும் கண்டுபிடிக் கவோ, தண்டிக்கவோமுடியவில்லை. அப்புறம் எப்படி சட்டத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும்.

பெண்கள் காமம் குறித்து தங்களது மனதின் சிறு அசைவுகளைக்கூட வெளிப்படுத்த முடியாத கலாச்சார சூழல்தான் இன்று நிலவி வருகிறது. இந்த சமூகம் ஒரு மனிதனுடைய ஒவ்வொரு செயலிலும் "சுயநலமே" அதிக சதவீதம் இடம் பிடிக்கிறது. ஒரு மனிதனை புறக்கணிப்பதும், தனிமைப் படுத்துவதும் அவனுக்கு தரும் தண்டனையாக எடுத்துக் கொள்ள முடியாது. எந்த தவறில் அதிகம் கவனம் செலுத்தகிறானோ அதிலே சீர்திருத்தம் செய்ய அவனுக்கு முக்கிய இடம் தர வேண்டும். அப்பொழுது குற்றங்கள் தனாக குறைந்து விடும்.

இந்தியாவில் எத்தனை கோடி மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனை மகாபாரதம் இருக்கிறது. சமூகத்தில் உள்ள வன்முறைக்கு எந்த விதத்திலும் குறைவானதில்லை. குடும்பத்தில் உள்ள வன்முறை ரத்தம் சிந்தாத இந்த வன்முறைக்கு ஆயுதம் சொற்கள்தான்.

இருபது ஆனாலும் அறுபது ஆனாலும் ஆம்பள புத்தி ஒன்னுதான் பொம்பள விஷயத்தில, நிமிஷம் ஒரு புத்தி வெளிப்படுத்தி பண்பாட்டை கேள்விக்குறியாக்காமல் இந்த பொம்பள புத்திகள் தூங்காது.

இதற்கு அறிவுதான் காரணம். அறிவு என்பது ஆண் பால், பெண் பால் பேதமில்லை. ஒரே சமநிலைதான்.

ஒன்றறிவு அதுவே உற்றறிவு
இரண்டறிவு அதுவே அதனொடு நாவே
மூனறிவு அதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவு அதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவு அதுவே அவற்றொடு செவியே
ஆறறிவு அதுவே அவற்றொடு மனமே

ஆறாவதையும் கடந்து ஏழாவது நிலை எய்தினால் அதுவே தெய்வநிலை. ஓரறிவு, ஈரறிவு உயிர்களால் நாம் பரிணாமம் பெற்றதை நூறுகால் புழுக்களாய் ஊர்ந்தோம். எட்டுகால் பூச்சிகளாய் நகர்ந்தோம். நான்கு கால் விலங்கு களாய் ஓடினோம். இப்பொழுது இரண்டு கால் மனிதனாக எழுந்து நின்றோம்.



விலங்குகள் வாழ்வில் உடலே பிரதானம். மனிதன் வாழ்வில் அறிவே பிரதானம். அறிவில்லாதவன் விலங்குகளுக்கு ஒப்பிடுவது இன்றையநிலை. மனத்தால் உயர்கிறவன் மனிதன். அந்த மனிதில் இருந்து விலகி உயரு கிறவன் தெய்வம். அப்படி மனம் கடந்து மகான்கள் பிறர் மனதில் ஓடும் எண்ணங்களை எளிதாக உணர்ந்து சொல்லி விடுவார்கள். அதனால்தான் தெய்வங்களே என்கிறார் திருவள்ளுவர்.

**“ஐயப்படா அது அகத்து உணர்வானைத் தெய்வத்தோடு ஒப்புக் கொளல்“**

மனிதன் இப்படித்தான் தன்னிலையில் இருந்து உயர முடியும்.

அவமானப்படுவது முக்கியமல்ல. நாம் நேசிக்கும் ஒருவர் முன் நாம் அவமானப்பட்டு நிற்பதுதான் தாங்க முடியாத வலி. அந்த வலி வைராக்கியத்தை உருவாக்க வேண்டுமே தவிர வஞ்சகத்தை உருவாக்கக் கூடாது. இப்படி தனி மனித ஒழுக்கம் சீர்திருத்தம் பெரும் வரும் நாடு கோமாளிகளின் கூடாரமாகவே இருக்கும்.

மீண்டும் பெரியார் வருவார், விவேகானந்தர் வருவார் என்று ஏன் இளைஞர் நினைக்க வேண்டும். நாம் ஏன் பெரியாராகவோ அம்பேத்கராகவோ மாறக்கூடாது. மாற்றம் என்பது வார்த்தையல்ல அது செயல். அது எங்கேயும் ஏற்படுத்த தேவையில்லை. அது ஒவ்வொரு மனிதனிடமிருந்தும் ஆரம்பிக்க வேண்டும். அப்படி நடந்தால் நம் நாடு மற்றும் மக்கள் இரு கோடுகளாக இருந்து வல்லரசு என்ற இரயிலை நாம் விட முடியும். அதுவரை எல்லாம் வெற்று அறிக்கைகளாகவும் வாய் ஜாலங்களாகவும் இருந்தால் இது நிறைவேற வாய்ப்பில்லை. இப்படித்தான் நான் கடந்து வந்த சமூகத்தைப் பார்த்தும், துடித்தும் இருக்கிறேன். இதற்காகவோ என்னவோ என்னைப் பாராட்டி என் சமூக சிந்தனைக்கு மதிப்புக் கொடுத்து இந்த கௌரவ டாக்டர் (முனைவர்) பட்டத்தை வழங்கியிருக்கிறார்கள்.

மனிதர்கள் பெறும் புகழ் இரண்டு வகை ஒன்று பெற்று சாவது! இன்னொன்று செத்து பெறுவது! இதுதான் வரலாறு!

இவனுக்கெல்லாம் பட்டம் ஒருகேடா! என்று நினைத்தவர்கள் தான் அதிகம் ஏன் என்றால் இந்த பட்டத்தை வைத்து பதவிக்கோ, உத்தியோகத்துக்கோ போக முடியுமா? பாரில் பசித்தவனுக்கு ஒருவேளை உணவைத்தான் போட முடியுமா? அவர்கள் நினைத்ததில் என்ன தப்பு இருக்கிறது யாருக்கும் உதவாத இந்தப் பட்டம் மரியாதை, வீரியமிக்க அறிவு நிறைந்த ஆண்மகனுக்கு தேவையில்லைதான்?

உலகை பார்த்து வாழ்பவன் சராசரி மனிதன்... உலகமே பார்க்க வாழ்பவன் சாதனை மனிதன்.... இரண்டாம் நிலை மனிதனாகவே இருக்க வாழ முனைகிறேன்

10-09-2017 அன்று பட்டத்தை வழங்கிய யுனிவர்சல் பிரஸ் மீடியா எஜூகேஷனல் வித்யாபத் பல்கலைக் கழகத்துக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் (முனைவர்) பட்டம் பெற்றதை அறிந்து நேரிலும், கைபேசியிலும், சமூக ஊடகத்தின் வாயிலாகவும் வாழ்த்திய அன்பு உள்ளங்களுக்கு என் நன்றிகள் கோடி!

**வாழ்க தமிழ்.... வளர்க தமிழகம்....**

அன்புடன்

- முனைவர் **ஆ. மவுரியன்**



# ஆசிரியருக்கு வாழ்த்துகள்..!

செய்திகளை மட்டுமே காட்டாமல்,
செய்திகளின் சரியான நிலையை
மன தராசில் வைத்து சரிபார்த்து,
அரசியலின் போக்கை
பொழுது போக்காய்
சொல்லிப் போகாமல்
பொழுது போக்கான
சினிமா, விளையாட்டு
போன்ற துறைகளில் இருக்கும்
அரசியலை ஆராய்ந்து
சலித்தெடுத்து
சரியான தேவையான
தகவலை தந்து,
மக்களின்
தேவைகளையும்,
எதிர் பார்ப்புகளையும்
கண்டறிந்து,
மக்களின் குறைகளை
நாட்டு நடப்பின் உண்மைகளையும்
மேலோட்டமாய் இல்லாமல்
களம் இறங்கி விசாரணை செய்து
உண்மையான தகவல்களை
மட்டும் துணிச்சலுடன்
வெளியிட்டு வரும்
நம் மக்கள் விசாரணைக்கு
கிடைத்த
ஒர் அங்கீகாரமாய்
நம் மக்கள் விசாரணையின்
ஆசிரியர் **ஆ. மவுரியன்**
அவர்களுக்கு சிறந்த பத்திரிகை
சமூக சேவைக்காக
முனைவர் பட்டம் அளித்து
கௌரவித்தது மிக்க மகிழ்ச்சி
வெற்றி தொடர வாழ்த்துகள்!



பேராசிரியர் **ந.நித்தியா**
துணை ஆசிரியர் - மக்கள் விசாரணை




# மதுபான கடையை மூட அரசு நடவடிக்கை எடுக்குமா?

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி வழி சவுளூர் கிராமத்தில் NH44 - 100 மீ. அருகில் மதுபானக் கடை செயல்பட்டு வருகிறது.




இந்த மதுபானக் கடை ரோட்டிற்கு மிக அருகில் இருப்பதால் போக்குவரத்து இடையூறு ஏற்படுவது மட்டுமில்லாமல் வண்டியை மெயின் ரோட்டில் விட்டுவிட்டு செல்கின்றனர். வாகன ஓட்டிகளும் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர். அரசு பள்ளிக்கும், தனியார் பள்ளிக்கும் 100 மற்றும் 200 மீட்டர் அருகிலேயே இந்த மதுபானக் கடை உள்ளது. இதனால் பள்ளிக் குழந்தைகளும் தனியாக வீட்டிற்கு செல்ல அஞ்சுகின்றனர்.

மது அருந்தவிட்டு வாகனத்தில் செல்லும் போது விபத்து நடைபெற அதிக வாய்ப்பு உள்ளது. ஏற்கனவே இந்த பகுதியில் அதிகமான விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த மதுபானக் கடையை பார்க்கும் போது திருவிழா போல் காட்சி அளிக்கிறது. ஆங்காங்கே வண்டிகளும் மதுபான பாட்டில்களும் உள்ளது.

இந்த பகுதியில் விபத்து மட்டுமில்லாமல் நகை திருட்டு, வாகன திருட்டு போன்ற சம்பவங்களும் நடைபெறுகிறது. மது அருந்திவிட்டு செல்லும் நபர்களிடம் பணம் திருட்டு ஏற்பட்டுள்ளது. இந்த பகுதியில் அடிக்கடி விபத்தும் நடைபெற்று வருகிறது. இதனிடையே அந்த பகுதிகளில் மர்மமான முறையில் ஒரு நபர் இறந்துள்ளனர் என்ற தகவலும் வெளிவந்துள்ளது.



பாலத்திற்கு அருகில் மதுபானக்கடை உள்ளதால் மது அருந்திவிட்டு பாலத்திற்கு படுத்து உறங்குகின்றனர்.

சருவூர் பகுதியில் பொதுமக்கள் மற்றும் ஊதுபத்தி, சாம்பிராணி தயாரிக்கும் கம்பெனியில் பெண்கள் அதிகமாக வேலை செய்து



வருகின்றனர். இங்கே இரண்டு மதுக் கடைகளும் ஒரே இடத்தில் செயல்பட்டு வருவதால் மதுப் பிரியர்கள் மது அருந்திவிட்டு தமக்கு தொல்லை தருவார்களோ என பயந்து அச்சத்துடனேயே வீட்டிற்கு செல்கின்றனர்

இரண்டாவதாக பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் தருமபுரி மாவட்டத்தில் ஒரு இடத்தில் மூன்று மதுபான கடைகள் செயல்பட்டு வருகின்றன. பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் இரண்டு அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளும் செயல் பட்டு வருகின்றன. இந்த பகுதியில் எந்த நேரமும் மக்கள் நடமாட்டம் இருந்துகொண்டேதான் இருக்கும். இந்த பகுதியில் இருந்து ஏராளமான மக்கள் அருகில் உள்ள பல ஊர்களுக்கு சென்று வருகின்றனர். இந்த பகுதியில் ஈ.பி. ஆபீஸ் செயல்பட்டு வருகின்றது.

ஏராளமான மக்கள் சுற்று வட்டார பகுதி யில் இருந்து ஈ.பி.யில் பணம் கட்ட வருகின்ற னர். அதுவும் இந்த மதுபானக் கடையானது ஈ.பி.ஆபீசுக்கு எதிரிலும் மெயின் ரோட்டிலும் உள்ளது. பொதுமக்கள் மற்றும் பெண்கள், வாகன ஓட்டிகள் பெறும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர்.

பலமுறை காவல்துறையிடம் புகார் கொடுத்தும், பெண்கள் போராட்டம் நடத்தியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. இந்தப் பிரச்சினையில் தமிழக அரசு தலையிட்டு இந்த இரண்டு ஊர் பகுதியில் உள்ள மதுபானக் கடைகளை மூடுவதற்கு வழி வகை செய்ய வலியுறுத்துகின்றனர் பொதுமக்கள்.

**- சிலம்பரசன்**


## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. **Email : news@makkalvisaranai.com**
போன் : 044 - 4354 2611, செல் : 9382133334



ஆ. மவுரியன்

சரித்திரத் தொடர் 9

## தமிழ் மண்ணின் வீர வரலாறு

# மாவீரன் மருதநாயகம்

தொடர்ந்து இரண்டாண்டுகள் ஆங்கிலேயர்களை தூங்க விடாமல் செய்தவன், ஷஹீதாகி மீள முடியாத உறக்கத்தில் ஆழ்ந்தான்..! தாய் நாட்டிற்காக தன்னுயிர் தந்த, தலைவனின் உடல் சின்னாப்பின்னப்படுத்தப்பட்டதை நினைக்கும் போது நெஞ்சம் பதறுகிறது. விழிகள் கலங்குகின்றன. இந்த தியாகத்தை யாராவது போற்றுகிறார்களா? நினைக்க நினைக்க நெஞ்சு விம்முகிறதே?

**மதுரை விமான நிலையத்திற்கு மருதநாயகம் பெயர்!**

மருதநாயகத்தின் வீரம் இந்திய வரலாற்றில் போற்றத்தக்கது மட்டு மின்றி நிகரற்றதுமாகும். இந்தியாவில் வேறு யாரையும் கண்டு இந்த அளவுக்கு ஆங்கிலேயர்கள் நடுங்கியதில்லை. திப்பு சுல்தானை மட்டுமே இவரோடு ஒப்பிட முடியும்.

இவரது வீர மரணத்திற்கு பிறகு, தமிழகம் முழுவதுமாக ஆங்கிலேயர் கட்டுப்பாட்டிற்கு வந்தது. பிரெஞ்சுக்காரர்களும், டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களுக்கு எதிரான போரை நிறுத்திக் கொண்டு, எஞ்சிய பகுதிகளை மட்டுமே, ஆள முடிவு செய்தனர். மருதநாயகத்தின் படை வீரர்களில் பெரும் பாலோர் சரணடைய மறுத்து மைசூர் சென்று ஹைதர் அலியுடன் சேர்ந்து கொண்டனர். 16 ஆண்டுகள் கழித்து அவரது மகன் சுல்தான் திண்டுக்கல்லில் இருந்தவாறு, படை திரட்டி போராட முயன்றதாக சில வரலாற்று குறிப்புகள் உள்ளன. (நன்றி : இந்திய விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள் செ.திவான்)

ஹிஜ்ரி 1222, (கிபி 1808) ல் கான்சாஹிப் பெயரில் சம்மட்டிபுரத்தில் பள்ளிவாசல் ஒன்று கட்டடப்பட்டது. இது தமிழிலும், பார்ஸி மொழியிலும் அங்குள்ள கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

அந்த மாவீரனை போற்றும் வகையில் தமிழக அரசு காவல்துறைக்கு வழங்கும் விருதுகளில் ஒன்றுக்கு மருதநாயகத்தின் பெயரை சூட்ட வேண்டும். மதுரையில் உருவாகி வரும் சர்வதேச விமான நிலையத்திற்கும் அவர் பெயரை சூட்டி அந்த வீரத்தமிழனை கண்ணியப்படுத்த வேண்டும்! முயற்சிப் பார்களா?

**- அடுத்து இன்னொரு வரலாற்று சரித்திரத்தில் சந்திப்போம்...**



# டாக்டர் ஆ. மவுரியன் அவர்களுக்கு வாழ்த்துகள்...

கதையாக கவிதையாக
கட்டுரையாக திரைக்கதையாக
தமிழ் எழுத்தெடுத்து
ஆள்பவனே!

எடுத்தாண்ட - தமிழ்
எழுத்துகளால் இனிய
வெற்றி படைத்தவனே
வாழ்த்துகள்! வாழ்த்துகள்!!

உண்மை உழைப்பெழுதி
நேற்று நிருபராக உழைத்தாய்!
ஆசிரியர் மகுடம் சூடி
மக்கள் விசாரணையை
ஆறாண்டுகளில் உலகெங்கும்
மலரச் செய்து இனிதே இன்று
நற்பெயரோடு தழைத்தாய்!

சமூகம் நோக்கம் மறந்து
தினம் செங்கோல் போர்
நடக்கின்ற சூழலில்
சமூக நோக்கோடு எழுதுகோலை
செங்கோலாய் எண்ணி
இதழ் என்னும் ராஜ்ஜியத்தில்
சமூகப்பணி ஆற்றிவரும்
எங்கள் அன்பின் மாமன்னன்!
டாக்டர் (முனைவர்) பட்டம்
பெற்றிருக்கும் எங்கள் ஆசிரியர்
எழுத்தாளர் முனைவர்
**ஆ, மவுரியன் ஆறுமுகத்திற்கு**
வாழ்த்துகள்!

இன்னும் பல பட்டம்
உன்னை
தழுவி மகிழட்டும்
நல்லோர்களின்
வாழ்த்துகள்
உன்னை வந்து
குவியட்டும்



என்றும் அன்புடன்

கவிஞர் **ஆ.தே,முருகையன்**

பொறுப்பாசிரியர் - மக்கள் விசாரணை

# சிந்தனை முத்துக்கள்



## சிந்தனை

அழும்போது தனிமையில் அழு
சிரிக்கும்பொழுது நண்பர்களோடு சிரி
கூட்டத்தில் அழுதால் நடிப்பு என்பார்கள்
தனிமையில் சிரித்தால் பைத்தியம் என்பார்கள்

## தாய்

கடவுளை
வீதியில் விட்டுவிட்டு
ஆலயம் தோறும்
தேடுகிறார்கள் மூடர்கள்

## நேர்முரண்

எவன் எக்கேடு கெட்டு
போனா என்ன - நான்
நல்லா இருந்தா போதும்னு
நினைக்கிறவன்தான்
நல்லா இருக்கான்
நானும் நல்லா இருக்கனும்
அடுத்தவனையும்
வாழ வைக்கனும்னு
நினைக்கிறவன் கஷ்டப்பட்டுக்
கொண்டே இருக்கிறான்

## நம்பிக்கை

நீங்கள் எந்த வார்த்தையை
அடிக்கடி சொல்கிறீர்களோ
அந்த வார்த்தை ஒருநாள்
உங்கள் வாழ்க்கையில்
உண்மையாக பலித்துவிடும்
எனவே நம்பிக்கையுடன்
பேசுங்கள் நல்லதே நடக்கும்

## கலாச்சார யுக்தி

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமென்றால்
முதலில் அவன் மொழி கலாச்சாரம்
பண்பாடு அழித்தால் போதும்
அந்த இனம் தானாக அழிந்துவிடும்.
ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்து
கலாச்சாரத்தையும், பண்பாட்டையும்
நீட்டையும் ஆதரித்து நம் மாணவர்கள்
எதிர்கால கனவை நசுக்கப்பட்டுவிட்டது.
இது மிகப்பெரிய சதியின் பின்னால்
சர்வதேச தீய சக்திகள் வேலை செய்கிறது.

## என்ன ஒரு வித்தியாசம்

ஆளுநருக்கும் பிரதமருக்கும்
என்ன வித்தியாசம், டெல்லில இருந்து அப்போ
அப்போ தமிழ்நாடு வந்துட்டு போனா ஆளுநர்
ஸ்விஸர்லாந்து, ஜப்பான், ரஷ்யானு போல
வெளிநாட்டு இருந்து அப்போ, இப்போ இந்தியா
வந்துட்டு போனா பிரதமர்!

## அவசரம்

இந்திய ரூபாயின் மதிப்பை
கணிக்க முடியாமல் குழப்பமாக உள்ளது.
பல நாடுகள் கவலை இந்தியாவுல இருக்கிற
எங்களுக்கு இன்னும் தெரியல அதுக்குள்ள
உங்களுக்கு என்னடா அவசரம்

## கவிதை பஞ்ச்

அரசியலுக்கு பிள்ளையார் சுழி
போடுவதற்கு முன்னே
முதலமைச்சர் ஆசை வரலாமா?
அப்படி வந்தாலும்
வெளியில் சொல்லலாமா?
அரசியல் பாலப்பாடமே
கற்காத உலக நடிகரே...!
யதார்த்தம் திரைக்கு உதவும்!
மக்களை மனதில்கொண்டு
அரசியல் காய் நகரட்டும்
உழைப்புக்கேற்ற பலன் கிட்டும்!
இது என்ன திரைப்படமா?
எடுத்தவுடன் கொட்டுவதற்கு?
அறிவிப்பும் அறிக்கையும்
மக்களுக்கு உதவாது
உண் கை என்ன செய்தது?
நாளை என்ன செய்யப்போகிறது?
மக்கள் விழிப்புடன் இருக்கிறார்கள்!

**- ஆ.தே.முருகையன்**

## ஏனோ தானோ..!

ரேசன் ஸ்மார்ட் அட்டையில்
விநாயகர் படம்
இந்தியாவிலேயே - ஏன்
இந்த வேல்ட்டுலேயே
விநாயகருக்கு
ஸ்மார்ட்டு கார்டு கொடுத்த
ஒரே அரசு
நம்ம தமிழக அரசுதான்!

## எளிது..!

சேர்ப்பது மிக கடினம்
செலவு செய்வது மிக எளிது
பணம் மட்டுமல்ல அடுத்தவர்
உள்ளத்தில் நாம் சேர்த்து
வைக்கும் நம்பிக்கையும் கூட

## தொடரும் பிரச்சினை

முதலில் நோட்டுப் பிரச்சினை
அப்ரோம் மாட்டுப் பிரச்சினை
இப்ப நீட்டுப் பிரச்சினை
எப்படா முடியும்
எங்க நாட்டுப் பிரச்சினை?

## இதயம் இல்லாதவர்கள்

இப்படியே நீ இதயமில்லாமல்
எல்லா மரங்களையும் வெட்டி
வீழ்த்திக்கொண்டே போனால்
நாளை சுடுகாட்டுக்குச் செல்லும்
உன் பிணத்தை எரிக்க
சுள்ளிகள் கூட கிடைக்காது ஜாக்கிரதை!

## எனக்கு வந்தா ரத்தம் எதிரிக்கு?

உங்க அம்மாப் பேச்சுதான்
உங்களுக்கு முக்கியமா போச்சு என்று
கணவனிடம் கடுகடுப்பாய் காட்டும்
மனைவிதான் தன் பிள்ளைகளிடம் அம்மாப்
பேச்சைக் கேட்பியா? மாட்டியா? என்று
அதட்டுகிறாள்

## நக்கல்

ஹிந்தி
கத்துக்கிட்டா
வாழ்க்கையில்
முன்னேறலாம்

- எஸ்.வி.சேகர்

திருப்பூருக்கு
வந்து பாருங்க
ஹிந்தி காரனுங்க
பொழைக்க
தமிழ் கத்துக்குட்டு
இருக்கானுங்க

- சாமானியன்





# மக்கள் மன்றம்தான் தீர்ப்பு சொல்ல வேண்டும்!



18 சட்டமன்ற உறுப்பினர்கள் நீக்கம் தமிழக வரலாற்றிலேயே புதிது என்கிறார்கள். இல்லை, 1988-ல் இதே கூத்தை அன்றைய சபாநாயகர் பி.ஹெச்.பாண்டியன் நடத்தினார். எம்ஜிஆர் மறைவைத் தொடர்ந்து, 132 சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட அதிமுகவில், ஜெயலலிதாவை 33 பேர் ஆதரித்தார்கள். இன்றைய தனபால் போல, அன்றைய சபாநாயகர் பி.ஹெச்.பாண்டியன், ஜெ. அணியைச் சேர்ந்த 33 பேரையும் தகுதிநீக்கம் செய்தார். 26.1.1988-ல் அவர் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தியபோது, திமுக, காங்கிரஸ் உறுப்பினர்கள் அதைப் புறக்கணித்தார்கள். கடைசியில், வெறும் 111 உறுப்பினர்களைக் கொண்டு நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தி, அதில் ஜானகி வென்றதாக அறிவித்தார் பி.ஹெச். பாண்டியன்.

கடைசியில் அது நடந்தேவிட்டது. தினகரன் அணியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் 18 பேரை, தகுதிநீக்கம் செய்துவிட்டார் சபாநாயகர். 20-ம் தேதிக்குப் பிறகு பெரும்பான்மையை நிரூபிக்குமாறு, எடப்பாடி பழனிசாமியை ஆளுநர் கேட்டுக் கொள்ளலாம். அதில் அவர் தோற்க வாய்ப்பே இல்லை. ஆனால், இந்த ஆட்சி நிலைக்குமா, நிலைக்கலாமா என்ற கேள்வி எழுகிறது.

வானளாவிய அதிகாரம் உள்ளதாக வாய்ஜாலம் காட்டிய பி.ஹெச்.பாண்டியனின் தீர்ப்பை மாற்றி எழுதியது, உண்மையிலேயே வானளாவிய அதிகாரம் கொண்ட மத்திய அரசு. கூடுதலாக ஒரு 15 நாட்கள் அந்த ஆட்சி நடக்கத்தான் சபாநாயகரால் உதவ முடிந்ததே தவிர, அதிமுக ஆட்சி அதன் பதவிக்காலத்தை நிறைவுசெய்ய அவரது நடவடிக்கை உதவவில்லை.

இந்த முறையும் அந்த வரலாறு திரும்ப வாய்ப்பிருக்கிறது. காரணம், 18 உறுப்பினர் களின் தகுதிநீக்கம், சட்டத்துக்குப் புறம்பானது என்றே சட்ட நிபுணர்கள் சொல்கிறார்கள். கட்சி கொறடாவின் அதிகாரம் சட்ட மன்றத் துக்குள்தான் செல்லுபடியாகும். சபைக்கு வெளியே ஒரு உறுப்பினரின் செயல்பாட்டின் மீது நடவடிக்கை எடுக்க அவரால் பரிந்துரைக்க முடியாது.


கட்சித்தாவல் சட்டத்தின்படி உறுப்பினர் கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு. ஆனால், தினகரன் அணியைச் சேர்ந்த 18 உறுப்பினர்களும் அரசுக்கோ, ஆளுங்கட்சிக்கோ எதிராகச் செயல்பட்டதற்கான எந்த ஆதாரமும் கிடை

யாது. அவர்கள் ஆளுநரைச் சந்தித்து அளித்த மனுவில்கூட, இந்த அரசின் மீது நம்பிக்கை யில்லை என்று சொல்லப்பட வில்லை. முதல்வர் பதவியிலிருந்து பழனிசாமியை நீக்க வேண்டும் என்றுதான் கோரியிருந்தார்கள்.

ஆனால், பழனிசாமி கொண்டு வந்த நம்பிக்கை கோரும் தீர்மா னத்தை எதிர்த்து ஓ.பன்னீர்செல் வம் உள்ளிட்ட 12 பேர் வாக்களித் திருந்தனர். அவைக்குள் கட்சி கொறடா வின் உத்தரவை மதிக் காமல், பகிரங்கமாகக் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிச் செயல்பட்டும், 8 மாதமாக அவர்கள் மீது சிறு நடவடிக்கைகூட எடுக்கவில்லை சபாநாயகர். அதே நபர், சபை கூடும் வரையில்கூடக் காத்திருக்காமல், தினகரன் அணியைச் சேர்ந்த 18 பேரை அவசர கதியில் தகுதிநீக்கம் செய்திருப்பதற்கு ஒரே காரணம்தான் இருக்கிறது. 12ஐவிட 18 பெரியது. ஆட்சி கவிழ்ந்துவிடும் என்ற பயம்தான். இந்த நடவடிக்கை கொஞ்சமும் நியாயமற்றது. நீதிமன்றத்துக்கே சென்றாலும், இது செல்லாது.

கர்நாடகத்தில் இதேபோல முதல்வர் எடியூரப்பாவுக்கு எதிராகச் செயல்பட்ட 11 பாஜக எம்.எல்.ஏ.க்களைத் தகுதிநீக்கம் செய்தார் சபாநாயகர். அந்த நடவடிக்கை செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே, செப்டம்பரில் பழனிசாமி அரசு தப்பித்தாலும், குறைந்தபட்சம் டிசம்பர் வரையிலாவது தாக்குப்பிடிக்குமா என்பதே கேள்வி!

பழனிசாமியைக் கவிழ்ப்பதற்காக 18 எம்.எல்.ஏ.க்களை கர்நாடக குடகில் தங்க வைத்துவிட்டு, நம்பிக்கையில்லாத் தீர்மா னத்தை ஆளுநர் கொண்டுவர வேண்டுமென்று காத்திருந்தார் தினகரன். காணாமல்போனார் ஆளுநர். வெறும் 11 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு பெற்ற ஓ.பன்னீர்செல்வத்துக்காக சட்ட மன்றத்தைக் கூட்டிப் பெரும்பான்மையை நிருபிக்குமாறு, பழனிசாமிக்கு உத்தரவிட்ட





ஆளுநர், 19-க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.க்கள் ஆதரவுபெற்ற தினகரன் அணியின் கோரிக்கையை ஏற்காதது ஏன் என்று தமிழக எதிர்க் கட்சிகள் கூப்பாடு போட்டன. அவர் சென்னை வருவதாக இருந்தால், பழனிசாமி ஆட்சியை உறுதி செய்வதாகத்தான் இருக்க வேண்டும் என்பது பாஜகவின் விருப்பம். இப்போது அதற்கேற்பத்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறார் சபாநாயகர் தனபால்.

இனி ஆளுநர் வருவார். அவர் வேண்டு கோளின்படி, பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டுவார் பழனிசாமி. வாழ்த்திவிட்டுப் போவார் ஆளுநர். தினகரன் அணியினர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரலாம். அல்லது ஏற்கெனவே, திமுக தொடர்ந்து நிலுவையில் உள்ள வழக்கில் இதற்கு எதிராகத் தீர்ப்பு வரலாம். சபாநாயகரின் தீர்ப்பு சரியே என்று தீர்ப்பு வருவதற்கும் நம்முடைய சட்டத்தில் இடம் இருக்கிறது. ஒருவேளை அப்படி நடந் தால், எஞ்சியுள்ள மூன்றரை ஆண்டுகளும் இங்கே மக்களாட்சி நடைபெறப் போவ தில்லை. வாக்களித்த மக்களும் முக்கியமில்லை, வென்றுவந்த சட்டமன்ற உறுப்பினர்களும் முக்கியமில்லை. காலியாகக் கிடக்கும் ஆர்.கே. நகர் இடைத்தேர்தல், உள்ளாட்சித் தேர்தல், மக்கள் பணி என்று எதுவுமே முக்கியமில்லை. ஒரே ஒருவருக்குத்தான் இந்த ஆட்சி முக்கியம். அதுவும் மத்திய பாஜகவுக்கு என்றால், அதற்குப் பிறகும் தமிழக மக்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள் என்பது மட்டும் நிச்சயம்!

**-வி. அருணாச்சலம்**

# காவல் துறையில் சில கருங்காலிகள்



பாதுகாப்பு என்ற பெயரில், பல நாட்கள் வெளியூரில் தங்க வைக்கப்படும்போது குடிநீர் கூட சில நேரங்களில் கிடைப்பதில்லை. உணவு பழக்கத்தில் மாற்றம் ஏற்பட்டு நோய்களில் சிக்கி இளம் வயதில் போலீசார் பலர் உயிரிழந்து வருகின்றனர்.

போலீசார் கூறும்போது, ''தமிழகத்தில் போலீசாரின் பணிச்சுமை காரணமாக கடந்த 5 மாதங்களில் 83 போலீசார் உயிரிழந்துள்ளனர். இதற்கு காவல்துறையில் உள்ள சில கருங்காலி கள்தான் என்று சொல்கிறார்கள். போலீசாரின் பணிநேரத்தை வரையறுத்து செயல்படுத்த வேண்டும்.

காவலரின் பணிச்சுமையை குறைக்க வேண்டும். காவல்துறையில் காலியாக உள்ள 30 ஆயிரம் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். போலீசாரின் மன அழுத்தத்தை போக்க கவுன்சலிங், பொழுதுபோக்குகள், விளை யாட்டு உள்ளிட்ட நிகழ்ச்சிகளை அடிக்கடி ஏற்படுத்த வேண்டும். அரசு ஊழியர்கள் போல் போலீசாருக்கு 8 மணிநேரம் வேலைநேரம், ஊதிய முரண்பாட்டை களைதல் 7 ஆண்டுக்கு ஒரு முறை பதவி உயர்வு அனைத்து மாவட்டங் களிலும் காவலர் நல அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும், படி உயர்வு உள்ளிட்ட கோரிக்கை களை தமிழக அரசு செய்து தர வேண்டும்,'' என்கின்றனர்.

தமிழகத்தில் கடந்த 5 மாதங்களில் உடல் நிலை பாதிப்பு, பணிச்சுமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களில் 83 போலீசார் உயிரிழந்துள்ளனர். இதில் 15 பேர் தற்கொலை செய்துள்ளனர். தமிழக காவல்துறையில் போலீஸ் முதல் உயரதி காரிகள் வரை சுமார் 21 ஆயிரத்திற்கும் மேற் பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. இதனால் போலீசாருக்கு முக்கிய விசேஷங்கள், உடல்நல பாதிப்பின்போது விடுமுறை கிடைக் காத நிலை உள்ளது. எனவே, மன உளைச்சலு டனே போலீசார் பணியாற்றிய வேண்டிய சூழல் ஏற்படுகிறது. விடுமுறை கிடைக்காத விரக்தியில் சிலர் தற்கொலை உள்ளிட்ட விபரீத முடிவுகளை மேற்கொள்கின்றனர். கடந்த ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான 5 மாதங்களில் தமிழகத்தில் 83 போலீசார் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 15 பேர் தற்கொலை செய்துள்ளனர். 20 பேர் மாரடைப்பாலும், 29 பேர் சாலை விபத்துகளிலும் உயிரிழந்துள்ளனர். புற்று நோய், மஞ்சள் காமாலைக்கு 5 பேர், மீதமுள்ள 14 பேர் வேறு பல காரணங்களினாலும் உயிரிழந் துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் பாதுகாப்பு பணி யில் இருந்தபோது, மதுரை மாவட்டம், உசிலம் பட்டியை சேர்ந்த 14வது பட்டாலியன் போலீஸ் அருண்பாண்டியன் உட்பட 6 பேர் தற் கொலைக்கு முயன்று காப்பாற்றப்பட்டுள்ளனர். பணிச்சுமையில் ஏற்படும் மன அழுத்தமே உயிரி ழப்புக்கு முக்கிய காரணமென போலீசார் தரப்பில் தெரிவிக்கின்றனர்.

இடைவேளையின்றி நீண்டநேரம் பணி யாற்ற வேண்டியிருப்பதால் குடும்பத்துடன் நேரத்தை செலவிட முடியவதில்லை. பலர் பணியின் காரணமாக குடும்பத்தினரை பிரிந்து வேறு ஊரில் வாழ வேண்டியிருக்கிறது. உயரதி காரிகளின் டார்ச்சராலும் சிலர் தவறான முடி வுக்கு தள்ளப்படுகின்றனர். இதனால் போலீசா ருக்கு அதிகளவில் மன அழுத்தம் ஏற்படுகிறது. போலீசாரின் பணிநேரம் ஒழுங்கற்றதாக இருப்பதால் அவர்களால் சரியான நேரத்திற்கு உணவருந்த முடிவதில்லை.



ஓயாது செய்த தமிழ்ப் பணி
பாயாத இடமுமில்லை
தமிழ் அருவி போல்...
சேயாகி நாம் நிற்க
தாயாகி தமிழ் அன்னை.....
வடிவாகி அன்று முதல்
இன்றுவரை பணிசெய்தீர்....

தொடாத கருவில்லை
கையாளாத வார்த்தையில்லை....
விடா முயற்சியோடு
தமிழினத்திற்கு குரல் தொடுத்தீர்....
அடாத தடை வரினும் விடாமல்
தமிழ்த் தொண்டு செய்தீர்....


அனுபவம் தந்த
முதிர்ச்சியாய்ப் பழுத்த எழுத்துக்கள்...
ஆழ்ந்த கருத்துக்கள்
அசைபோடும் நினைவுகள்....
இலக்கணச் சுத்தமாய்
இலக்கிய வடிவாய் ...
அனைவரும்
பயன்பெறும் விதத்தில் பயணித்தீர்....

தங்களுக்கு தகுதிக்கு என்றோ
கிடைத்திருக்க வேண்டும்
இந்த "முனைவர்" பட்டம்...!

ஊர் உலகம் வாழ்த்தியது..!
மலைபோல் குவிந்தது மலர்கள்..!
வாழ்க நின் புகழ்
வாழ்க நின் தமிழ்த் தொண்டு...



# மனதார வாழ்த்துகிறேன்...




அன்புடன்

**காசி அரங்கநாதன்**

ஆசிரியர் - பாரத தமிழ்த் தாமரை

மாநில தலைவர் - தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்



# வள்ளலார் வழியில் அன்ன சேவை!

## பாலமுருகன்

அதிகாலையிலேயே தனது வீட்டில் தயாராகிவிடும் உணவை சூடு குறைவதற்குள் பொட்டலங்களாக மடித்து அடுக்கிக் கொண்டு, தண்ணீர் பாட்டில்கள் சூரியன் விழிக்கும் முன்னதாகவே புறப்பட்டு விடுகிறது பாலமுருகனின் அன்ன சேவை வாகனம்.

அப்படியே, போகிற போக்கில் அன்றைய தினத்துக்கு யார் வருகிறார்களோ அவர்களையும் உதவிக்கு அழைத்துக் கொண்டு ஆதரவற்றோரின் இடம் தேடி விரைகிறார் பாலமுருகன். யாருமில்லாத பட்சத்தில் தனது பிள்ளைகளைக் கூட்டிக் கொள்கிறார். சற்று நேரத்தில், உடுமலை மத்திய பேருந்து நிலையம், பழநி செல்லும் சாலை, பழைய பேருந்து நிலையம், பொள் ளாச்சி சாலை, ராஜேந்திரா சாலை, தளி சாலை என நகரின் நாலாபக்கமும் சென்று ஆதரவற்றோரின் கைகளில் நிறைகிறது இவரது காலை உணவு.

அன்னதானம் அடுத்த பரிணாமத்தை அடைந் திருப்பதாக ஏற்கெனவே இங்கே.. இவர்கள்.. இப்படி! பகுதியில் நாம் சொல்லி யிருந்தோம். இதோ, இங்கொருவரும் அப்படித்தான் இயலாதவர்களுக்கு தினமும் அன்ன சேவை செய்கிறார்!

'பசி என்று வந்தவருக்கு புசி என்று ஒரு பிடி உணவை கொடுத் துப் பாரப்பா..' என்றார் ராமலிங்க வள்ளலார். பசி நெருப்புக்கு ஒப்பா னது. அந்த நெருப்பை அணைக்க வேண்டும் என்பதற்காகத்தான் வடலூரில் வள்ளலார் மூட்டிய அடுப்பு இன்னமும் எரிந்து கொண்டிருக்கிறது. அவரது வழியில்தான் தினமும் இந்த அன்ன சேவையைச் செய்வதாகச் சொல்கிறார் உடு மலைப்பேட்டையைச் சேர்ந்த பாலமுருகன்.

எல்லா ஊர்களையும் போல உடுமலைப் பகுதியிலும் ஆதரவற்று விடப்பட்ட ஜீவன்களை ஆங்காங்கே பார்க்கமுடியும். இவர்களின் பலர் தாங்கள் என்ன செய் கிறோம் என்று தெரியாமலேயே குப்பை களைக் கிளறி அதில் கிடைக்கும் கெட்டுப் போன உணவுப் பொருட்களை எடுத்துத் தின்றுகொண்டிருப்பார்கள். என்ன செய்வது.. பசி வந்தால் தான் பத்தும் பறந்து விடுகிறதே! முன்பு, இவர்களைக் கவனிக்க ஆளில்லாமல் இருந்தது. இப்போது, இவர் களையும் கவனிக்க ஒரு ஜீவனிருக்கிறது. அவர்தான் பாலமுருகன்!



உடுமலையில் ரீவைண்டிங் தொழில் செய்து வருபவர் பாலமுருகன். ஆதரவற்றோருக்கு தினமும் காலையில் அவர்களது இடத்துக்கே தேடிப் போய் ஒருவேளை உணவளித்து வருகிறார் இவர். கடந்த ஒரு வருடம் முன்பு சாதாரணமாய் நினைத்து இவர் தொடங்கிய இந்த அன்ன சேவையின் மூலம் இப்போது தினமும் 120 பேருக்கு ஒருவேளை உணவுக்கு உத்தரவாதம் கிடைத்திருக்கிறது.

தனது அன்ன சேவை குறித்து நம்மிடம் நெகிழ்ந்து பேசிய பாலமுருகன், “பொள்ளாச்சியில் நண்பர் ஒருவர் இதுபோல இயலாதவர்களுக்கு உணவளித்து வருகிறார். இதற்கு முன்பு, எங்கள் வீட்டில் யாருக்காவது பிறந்த நாள், திருமண நாள் வந்தால் ஏழைகளுக்கு உணவளிப்போம். ஒரு கட்டத்தில், நமக்கு அருகிலிருக்கும் ஏழைகளுக்கு தினமும் ஏன் இந்த உதவியைச் செய்யக்கூடாது என எனக்குத் தோன்றியது. உடனே செயலில் இறங்கிவிட்டேன்.

ஆரம்பத்தில், தினமும் 20 பேருக்குத்தான் என்னால் உதவ முடிந்தது. போகப் போக எனது சேவையைப் புரிந்துகொண்ட நண்பர்கள் சிலர், அரிசி, பருப்பு என பொருள்களைத் தந்து ஊக்கப்படுத்தினர். சிலர், உதவிக்கும் வந்தார்கள். அப்படித்தான் இந்த எண்ணிக்கை 120 ஆனது. வள்ளலாரின் வழியில், பசித்தவருக்கு உணவளிக்கும் இந்த அன்ன சேவை எங்களுக்கு மிகுந்த மனநிம்மதியைத் தருகிறது. இது, எனக்குப் பிறகும் தொடரணும். அதற்காகத்தான் எனது பிள்ளைகளையும் உடன் அழைத்துச் செல்கிறேன். இதில், வறுமையும் பசியும் எவ்வளவு கொடியது என்பதை எனது பிள்ளைகளும் உணர வேண்டும் என்ற எனது சுயநலமும் இருக்கிறது.” என்று சொன்னார்.

**தொடரட்டும் இவரது அன்ன சேவை!**


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை

Applied in **NEWS PAPER ASSOCIATION OF INDIA**

**லஞ்ச ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-6 அக்டோபர்-2017 இதழ்-5

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் (பி) **லிட்.**, சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்
முனைவர் **ஆ. மவுரியன்,** B.A.,Dip. Journilisam,

• ஆசிரியர் குழு
**A. காதர் மொய்தீன், ஆ.தே. முருகையன்,**
**V. அருணாச்சலம், காசி. அரங்கநாதன், மு. பரமசிவம்**

• நிர்வாக ஆசிரியர்
**வீ. வடிவேல்,** B.B.A.,

• உதவி ஆசிரியர்
காக்களூர் **பாபு தங்கவேல்**

• துணை ஆசிரியர்கள்
**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார்,**
**S. கோபி, M. தரணி. எஸ். சரவணன், பி. மாரிமுத்து,**
**D. ரவி, வீரஆறுமுகம், A. பாலச்சந்தர்,**
**ந. நித்யா, கே.பாலாஜி, அ.மு.ரமணாத்திரி**

• முதன்மை செய்தியாளர்கள்
**S. ராம்குமார்** சேலம் **M. சத்தியராஜ்,** நாமக்கல்.
**A. பாலகிருஷ்ணன், செந்தில்குமார்,** கோவை,
**R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா,** தென்சென்னை
**யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** கிருஷ்ணகிரி.
**பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி. **நாகராஜ்,** மூணாறு.
**மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை, **சுசீ ஈஸ்வர்,** தென்காசி.
**ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம். **சிலம்பரசன்,** தர்மபுரி,
**வெங்கடேசன்** தி.மலை **S. ரமேஷ், அ. சிவராமன்,** காஞ்சிபுரம்.

• நிருபர்கள்
**எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, ராஜேஷ்**
**அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்**

• சட்ட ஆலோசகர்கள்
**M. குணசீலன்,** B.Com.,M.L.,
**M. சுதாகர்,** B.Sc.,B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர்கள் :
**M. சந்தோஷ்சிவன், K. மணிவண்ணன்**

• இதழ் வடிவமைப்பு : **AKS Creative's**

அலுவலகம் :



**மக்கள் விசாரணை**
நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி,
ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.
Email : news@makkalvisaranai.com / www. makkalvisaranai.com
Information Contact : feedback@makkalvisaranai.com
**Phone : 044 - 4354 2611, 93821 33334**



**Press & Registration of Book Act-in** ன்படி
செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார்.
எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள
நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

# சவமான சமூகநீதி



நெருக்கடிநிலை காலத்தில் மாநிலப் பட்டியலில் இருந்த கல்வி பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டதும், பிறகு 1977-ல் தமிழகத்தில் நிகழ்ந்த ஆட்சிமாற்றமும் கல்வியைக் கவலைக்குள்ளாக்கியது. 1978-லிருந்து ஆசிரியர்கள் முன்வைத்த அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதிய உயர்வு போராட்டம், புதிய கல்விக் கொள்கையில் மாற்றம், பி.யூ.சியை +2ஆகத் தரம் குறைக்கும் திட்டத்தை எதிர்த்தும், சுயநிதி கல்வி நிறுவனங்களைத் தொடங்க அனுமதிக்கும் திட்டத்தை எதிர்த்தும் போராடிய கோரிக்கைகளை ஜனநாயக முறையில் அணுகாமல் அரசுப் பள்ளி ஆசிரியர்களின் போராட்டத்தை முடக்கியதுதான் தமிழகத்தின் கல்வித் தரம் தொடர்பான சர்ச்சையின் தொடக்கப் புள்ளி.

1984-ல் நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்திய பிறகு மேல்நிலைக் கல்வித் திட்டம் என்பது மருத்துவம், பொறியியல், வேளாண்மை படிப்புகளுக்கு மாணவர்களை பிரத்யேகமாக உருவாக்கும் திட்டமானது. 1978 முதல் 1988 வரை ஆசிரியர் சமூகம், கல்வியை அரசே நடத்த வேண்டும் என்று ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடியது. அதற்கு மாறாக தமிழகத்தில் தனியார் சுயநிதிப் பள்ளிகள் தொடங்க அரசே அனுமதித்ததால் ஆங்கில வழிக் கல்வியின் மோகமும் தீவிரமாகப் பரவியது. இது படிப்படியாக 4,200 பள்ளிகளாகப் பல்கிப் பெருகி இன்று கிராமந்தோறும் ஒரு மெட்ரிக் பள்ளி என்ற நிலை ஏற்பட்டு அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கைக்குப் பெரும் சவால் விடுத்திருக்கிறது. ஒரு வகையில், இந்தியாவில் புதிய பொருளாதாரக் கொள்கைக்கும் தமிழகம்தான் முன்னோடி. ஏனென்றால், மத்திய அரசுக்கு முன் 1978 கல்வியில் தனியார் பங்களிப்பை அனுமதித்த முதல் மாநிலம் தமிழகம்தான்.

மருத்துவப் படிப்பு லட்சியம் கானல் நீரானதால், 1,200-க்கு 1176 மதிப்பெண்கள் எடுத்த ஒரு தலித் மாணவி தன் உயிரை மாய்த்துக் கொண்டிருக்கிறார். அனைவருக்கும் பொதுவான சமூகநீதியை, 'இடஒதுக்கீடு' என்பதை, தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் சமூகப் பின்புலத்தைக் கருத்தில் கொள்ளாமல் அணுகியதும், படித்தவர்கள் மத்தியிலும் விரவிக் காணப்படும் இடஒதுக்கீடு குறித்த கொச்சையான புரிதலின் அவலமும் இதற்குக் காரணம். 'மருத்துவப் படிப்பு கிடைக்கவில்லையெனில் வேறு படிப்புகளே இல்லையா? ஒரு வாய்ப்பு போனால் இன்னும் இரண்டு வாய்ப்புகள் இருக்கிறதே?' என்றெல்லாம் 'அறிவார்ந்த' சமூகம் வினவுவது, அவர்கள் எந்த அளவுக்கு அடித்தட்டு மக்களின் சமூகநீதி உணர்வுகளைப் புரிந்துவைத்திருக்கிறார்கள் என்பதை அம்பலப்படுத்துகிறது.

நீதிக்கட்சித் தலைவர்களாலும், பெரியாரின் தலைமையிலான திராவிட இயக்கமும் போராடிப் பெற்றுத்தந்த பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டின் பயனால் பொருளாதாரத்தில்வளர்ந்த இடைநிலைச்சமூகங்கள்தான், இன்றைக்கு தரம், திறமை, தகுதி என்னும் வெற்றுவாதத்தை முன்வைப்பதை ஆதரிக்கிறது என்பது வருந்தத் தக்கது. சமூகநீதி என்பது சமத்துவத்தின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிய பெருந்திட்டம். அதில் இடஒதுக்கீடுதான் சமநிலைச் சமுதாயத்தின் மையக்கரு. இந்தியாவைப் பொறுத்தவரையில் அதுதான் பல நேரங்களில் சமத்துவத்தை நோக்கிப் போராடும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாளும் கேடயமுமாக இருந்துவருகிறது.

போட்டித் தேர்வுகள்தான் திறமை பரிசோதிக்கும் சோதனைச்சாலை என்றும், பல்வேறு முறைகேடுகளுக்கும் தலையீடுகளுக்கும் தீர்வு அதுதான் என்று நம்பப்படுகிறது. தமிழகத்தில் 1983-வரை மருத்துவம் (பொது, பல், கால்நடை), பொறியியல், வேளாண்மை மற்றும் பிற படிப்புகளுக்கும் நுழைவுத் தேர்வுகள் நடத்தப் படாமல்தான் சேர்க்கை நடைபெற்றுவந்தது. அதுவரை தொழிற்கல்வியில் தனியார் துறை பங்களிப்பு அனுமதிக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அனைத்து கிராமங்களிலும் பெரிதும் சாதி-வர்க்க பேதமின்றி அரசுப் பள்ளிகளில்தான் படித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமூக நீதியை வழங்கியதிலும், அதற்கு எதிரான செயல்பாடுகளைச் செய்ததிலும் தமிழகம்தான் முன்னோடி. 1980-களிலிருந்து பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப் பரிந்துரைத்த மண்டல் கமிஷன் அறிக்கைக்கு எதிராக நடத்தப்பட்ட அரசியல் சதுரங்க விளையாட்டில், 1990-ல் மத்தியில் அமைந்த வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடுக்காகத் தனது ஆட்சியை இழந்தது 'யாரால்' என்று எத்தனை பேருக்கு தெரியும்.

மருத்துவத்துக்கு நுழைவுத் தேர்வின் அவசியத்துக்குள் இருக்கும் நூதனமான அரசியல் சித்தாந்தத்தை மிகக் கூர்மையாக உற்றுநோக்கிப் பார்த்தால் மருத்துவம், பொறியியல் மற்றும் இதர உயர் படிப்புகளை மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் விட்டுவைத்தால் மாநிலப் பாடத்திட்டத்தின் மூலம் அனைவருக்கும் சமவாய்ப்பு கிடைக்கும் என்பது மண்டல் கமிஷனை எதிர்த்தவர்களுக்குப் புரிகிறது.

ஏற்கெனவே, கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையான மாநில சுயாட்சியின் முதுகெலும்பை முறித்து வைத்துள்ளது மத்திய அரசு. இன்றைய அரசியல் கருத்தியலாளர்கள், கல்வியாளார்கள், சமூக ஆர்வலர்கள் கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படைப் புரிதலில் அணுகாமல் நுழைவுத் தேர்வை வெறும் பாடத்திட்டமாகவும், கேள்வித்தாள், வினா-விடை, மாதிரித் தேர்வு சார்ந்ததாகப் பார்க்கிறார்கள். அதிக மதிப்பெண்கள் பெற்று மருத்துவப் படிப்பில் சேர அடிப்படையான +1 பாடத்தை தவிர்த்துவிட்டு +2 பாடத்தை நடத்தும் போக்கினால் கல்வித் தரம் குறைந்திருக்க வாய்ப்பிருக்கிறதே தவிர இடஒதுக்கீட்டினால் அல்ல. 2006-ல் தமிழகத்தில்நுழைவுத்தேர்வு ரத்துசெய்யப்பட்ட பிறகு நுழைவுத்தேர்வு பயிற்சி மையங்கள் பாலைவனமாயின. அந்த சுமை மீண்டும் தனியார் கல்வி நிறுவனங்களின் மீதே திணிக்கப்பட்டது.

தமிழகத்தில் மீண்டும் சமூகநீதியை மீட்டெடுக்கும் போராட்டம் நடத்தப்பட வேண்டியிருக்கிறது. சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் ஆகியும்கூட சமூகநீதியின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் அதற்கு எதிராகக் கொள்கை வகுக்கப்படும் நிலை இருப்பதை என்னவென்று சொல்வது? இதனால், மீண்டும் மீண்டும் கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல், சமூகப் பொறுப்புகளில் பங்களிக்க முயலும் விளிம்புநிலை மக்களைத் தொடர்ந்து புறக்கணிப்பதிலும் வெளியேற்றுவதிலும் கல்வி மூலம் ஒரு அசாதாரணச் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சிதான் மனஅழுத்தம், விரக்தி, தற்கொலை என்று வாழ்க்கையின் நிச்சயமற்ற நிலையின் விளிம்புக்கு வளரிளம் தலைமுறையைத் தள்ளியிருக்கிறது இந்த 'நீட்' தேர்வு. இந்த விவகாரத்தில் சாதி, மத அடையாளங்கள், பாகுபாடுகளைக் கடந்த ஒரு நடுத்தர வர்க்க அரசியல் வாய் மூடிப் பேசுகிறது. ஒரே ஆண்டில் 'நீட்' தேர்வினால் ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்களின் மருத்துவர் கனவு மாண்டு போயிற்று. இனி வரும் காலங்களில் என்னென்ன நிகழுமோ?

**- கனகதுர்கா**




இந்தித் திணிப்பும் இந்தி எதிர்ப்பும் கடந்த 80 ஆண்டுகளாக நடந்துவரும் தொடர்கதை. "இந்தியா ஒரே நாடாக நீடிக்க வேண்டும் என்றால், இந்தியே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும்" என்று மத்திய அரசு தொடர்ந்து சொல்கிறது. தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களோ, "மாநில மொழிகளையும் மத்திய ஆட்சி மொழியாக அறிவித்துவிட்டால், ஏன் இந்தியா பிளவுபடப் போகிறது?" என்ற நியாயமான எதிர்வாதத்தை முன்வைக்கின்றன.

# நவோதயா பள்ளி

## இனம் மொழிக்கு ஆபத்தா?

தேசியவாதியான ராஜாஜி 1937-ல் முதல்வரானார். "இந்தியா விரைவில் விடுதலை பெறும். இதுவரையில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்தாலும், விடுதலைக்குப் பிறகு கண்டிப்பாக நம் தலைவர்கள் இந்தியைத்தான் ஆட்சிமொழியாக்குவார்கள். எனவே, முன்கூட்டியே தமிழர்களை இந்தி படிக்க வைத்துவிட்டால், பின்னாளில் அவர்களுக்குப் பாதிப்பு குறைவாக இருக்கும்" என்று கருதினார் ராஜாஜி. அரசுப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்தார். அவருக்கு முன்பே சென்னை மாகாணத்தை 17 ஆண்டுகள் ஆண்டுவிட்ட (1920 முதல் 1937 வரை) நீதிக் கட்சியினரோ தொடர்ந்து இந்தித் திணிப்பை எதிர்த்து வந்தவர்கள். இளம் தலைமுறையும் 'திராவிட நாடு' கனவில் இருந்ததால், இந்தியைக் கடுமையாக எதிர்த்தனர். விளைவாக, முதல் இந்தி எதிர்ப்புப் போர் 1938-ல் தொடங்கியது. இந்தித் திணிப்பு திரும்பப் பெறப்பட்டதால், போராட்டம் முடிவுக்கு வந்தது.

வரலாற்றைத் திருப்புகிற தீர்ப்பொன்று வந்திருக்கிறது. "தமிழகத்தில் நவோதயா பள்ளிகளைத் தொடங்க அனுமதியளிக்கப்படுகிறது. 8 வாரத்துக்குள் இதற்கான தடை-யில்லாச் சான்றிதழ்களைத் தமிழக அரசு வழங்க வேண்டும். மாவட்டம்தோறும் அதற்கான இடத்தை ஒதுக்கி, உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்துதருவதில்தமிழக அரசு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்று ஆணையிட்டிருக்கிறது சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை.

கணிசமான மக்களை மகிழ்ச்சியடைய வைத்துள்ள தீர்ப்பு இது என்பதில் சந்தேகமில்லை. 'இந்தி படிக்க நமக்கிருந்த தடை தகர்ந்துவிட்டது' என்ற மகிழ்ச்சியல்ல அது. தமிழகத்தில் ஒரே பாடத்திட்டம் நடைமுறையில் இல்லை. அரசுப் பள்ளிகள், சமச்சீர் கல்வித் திட்டத்தைப் பின்பற்றுகிற மெட்ரிக் பள்ளிகள், அதைப் பின்பற்றாத மெட்ரிக் பள்ளிகள், மத்திய பாடத்திட்டத்தைப் பின்பற்றுகிற கேந்திரிய பள்ளிகள், தனியார் சிபிஎஸ்இ பள்ளிகள், சர்வதேச (?) பாடத்திட்டத்தைப் பின்பற்றுகிற குளோபல் பள்ளிகள் என்று 6 வகையான பள்ளிகள் இருக்கின்றன.

மாநிலப் பள்ளிகளைவிட, மத்திய பள்ளிகள் தரமானவை என்றும், மத்திய பள்ளிகளைவிட சர்வதேசப் பள்ளிகள் தரமானவை என்றும் நம்பப்படுகிறது. ஏழைகளுக்கு ஒரு பள்ளி, நடுத்தர வர்க்கத்தினருக்கு வேறு பள்ளி, உயர் வர்க்கத்துக்கு வேறு பள்ளி என்ற வேறுபாடு இருக்கிறது. அரசு உதவி பெறும் பள்ளியைவிடக் குறைந்த கட்டணத்தில், மத்திய பாடத்திட்டக் கல்வி கிடைத்தால் ஏழை, நடுத்தர மக்கள் வரவேற்கவே செய்வார்கள். அவர்களில் பலர் கேந்திரிய பள்ளிகளுக்கு முயற்சித்து, ஒரு சீட்டுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ரூ. 2 லட்சம் கேட்கிறார்கள் என்ற உண்மையைப் புரிந்துகொண்டு பின்வாங்கியவர்கள்.



இந்த நேரத்தில் நவோதயா பள்ளிகள் ஏன் தமிழகத்தில் மட்டும் அனுமதிக்கப்படவில்லை என்ற வரலாற்றை அதை விரும்புகிற மக்களுக்கு சொல்லிக்காட்ட வேண்டிய கடமை ஊடகங் களுக்கு இருக்கிறது.

இந்தியா விடுதலை பெற்று, குடியரசாக மாறியதும் அரசியல் அமைப்புச் சட்டம் அமலுக்கு வந்தது. அந்தச் சட்டம் ராஜாஜி கணித்தபடியே, "அனைத்திந்திய ஆட்சி மொழியாக இருக்கும் ஆங்கிலத்தை நீக்கி விட்டு இந்தியை ஆட்சிமொழியாக்க வேண்டும்" என்று சொன்னது. ஆனால், பெரும்பாலான மாநிலங்களில் பலருக்கு இந்தி தெரியாது என்பதால், எல்லோரையும் தயார்படுத்துவதற் காகக் கால அவகாசம் அளித்து, 1965 ஜனவரி 26-ம் தேதி இந்தியை நாட்டின் ஆட்சி மொழி யாக மாற்றுவது என்று சட்டம் போட்டார்கள்.

இந்தி இந்தியாவின் தனி ஆட்சிமொழியாக (ஆங்கிலம் அறவே நீக்கப்படும்) முடி சூட்டப் போகிறது என்றதும், தமிழகம் கிளர்ந் தெழுந் தது. தமிழ்நாட்டில் காங்கிரஸை ஒட்டு மொத்த மாகத் தூக்கியெறிந்தார்கள் தமிழக மக்கள். இந்தித் திணிப்பு எதிர்ப்பு அரசு (திமுக) ஆட்சிப் பொறுப்பேற்றது. வாக்காளர்களின் விருப்பப் படி, இருமொழிச் சட்டத்தை நிறைவேற்றினார் அண்ணா. அதாவது, தமிழகத்துக்குத் தாய் மொழி தமிழ், தொடர்பு மொழி ஆங்கிலம் மட்டும் போதும். பள்ளிகளில் இவ்விரு மொழிகள் மட்டுமே கற்பிக்கப்படும் என்று சட்டம் போட்டார். அதை அப்படியே தொடர்ந்தார் கருணாநிதி.

நெருக்கடிநிலை 1975-ல் நடைமுறைக்கு வந்தது. மாநிலங்களின் அதிகாரப் பட்டியலில் இருந்த கல்வி, பொதுப் பட்டியலுக்குப் போனது. என்.சி.சி.யில்கூட இந்தியில் கட்டளையிடக் கூடாது என்ற நிலை மாறி, தமிழே இல்லாமல் இந்தி, ஆங்கிலம் மட்டுமே கற்பிக்கிற பள்ளி களும் தமிழகத்துக்குள் நுழைந்தன. அதனைத் தடுக்கும் அதிகாரமின்றி விழித்தது தமிழக அரசு. மாநில அரசு அங்கீகாரம் அளிக்கும் பள்ளிகளில் மட்டும், இந்தியைத் தடுக்கிறது தமிழக அரசு. அதன் ஒரு பகுதிதான் நவோதயா பள்ளிகளைத் தடுத்ததும்.

அது மத்திய அரசுப் பள்ளிதானே என்று சிலர் கருதலாம். இல்லை, மாநில அரசின் பங்களிப்புடன் கூடிய பள்ளி. மாநில அரசு 30 ஏக்கர் நிலத்தை இலவசமாகத் தருகிறது. கூடவே, புதிய கட்டிடம் கட்டப்படும் வரையில் வாடகையில்லாமல் ஒரு பள்ளிக் கட்டிடத் தையும், ஆசிரியர்களுக்கான குடியிருப்பையும் மாநில அரசே வழங்க வேண்டும்.

இவ்வளவு உதவிகளைச் செய்கிறபோது, எங்களது இருமொழிக் கொள்கையை ஏற்றால் என்ன என்பது தமிழக அரசின் வாதம். "6 முதல் 10 வரையில் தமிழையும்தானே கற்பிக் கிறோம். 11, 12-ல் வேண்டும் என்றால் தமிழை யும் விருப்பப்பாடமாகத் தேர்வு செய்து கொள்ளலாம்" என்றது மத்திய அரசு.

**எல்லாம் சரி, விருப்பப் பாடமாகத் தமிழைத் தேர்வு செய்து கொள்ளலாம் என்றால் எல்லோரும் தமிழைத் தேர்வுசெய்வார்களா? என்ற கேள்வி இருக்கிறதல்லவா? தமிழுக்கு முன்னுரிமை அல்லவா கொடுத்திருக்க வேண்டும்! - இர்வின்**




திருவண்ணாமலை ஒரு வரலாறு முக்கியத்துவம் பெற்ற தமிழ்நாட்டில் உள்ள மிகவும் பழமை வாய்ந்த புண்ணிய திருத்தலமாகும். இங்கு உள்ள கோயிலில் அருணாச்சலேஸ்வரர் அக்னிவடிவதில் காட்சியளிக்கிறார். திருவண்ணாமலை கோயிலை பற்றி பல கவிகள் கவி இயற்றி பாடியுள்ளனர். இது ஒரு பாடல்பெற்ற ஸ்தலமாக விளங்குகிறது. இக்கோயில் பிரகாரங்களில் உள்ள கற்களில் பல முக்கிய குறிப்புகள் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வெ ழுத்துக்கள் பல நிகழ்வுகளை மக்களுக்கு தெரிவிக்கின்றன. மேலும் இக்கோயில் மற்றும் ஸ்தலத்தை பற்றிய விவரங்கள் இங்கு கிடைத்த செம்பு தட்டுகளால் [செப்பு தகடுகளால்] கிடைக்கப்பெற்றது.

திருவண்ணாமலையின் புகழை மேலும் தமிழ் சைவ மகாகவிகளான அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், மற்றும் சம்பந்தர் ஆகியவர்கள் அவர்கள் இயற்றிய கவிகள் முலம் மக்களுக்கு எடுத்துரைத்துள்ளனர். தமிழ் இலக்கியங்களான தேவாரம் மற்றும் திருவாசகம் இதனை வெளிக்காட்டுகிறது.

அருணாச்சலேஸ்வரரை பற்றியும் திருவண்ணாமலையை பற்றியும் அருண கிரிநாதர் அவர்கள் எழுத்துகள் முலம் சிறப்பாக உரைத்துள்ளார். இப்படைப்பு களை வாசித்த சோழ மன்னர்கள் மிகவும் பூரிப்படைந்து இக்கோயிலுக்காக பல உதவிகளை செய்துள்ளனர். மேலும் கடவுள் அருணாச்சலேஸ்வரர் மகிமை மீது மிகுந்த நம்பிக்கை அடைந்துள்ளனர். சோழ மன்னர்கள் பல கோபுரங்கள், மண்டபங்கள், கோயிலை சேர்ந்த கட்டிடங்கள் கட்டி கொடுத்து கடந்த ஆயிரம் காலமாக கோயில் முன்னேற்றம் அடைய உதவியுள்ளனர்.

மேலும் விஜய நகரை ஆண்ட மன்னர் கிருஷ்ணதேவராயர் திருவண்ணாமலை கோயில் வளர்ச்சிக்காக கோபுரங்கள், மண்டபங்கள் என பல கட்டிடங்களை கட்டிக்கொடுத்து உதவியுள்ளார். இதில்



காக்களூர்
த. துரைபாபு

***217*** அடி கொண்ட ராஜகோபுரம் மன்னர் கிருஷ்ணதேவராயர் உதவியால் உருவாக்கப் பட்டது. இவர் அண்ணாமலையாரின் தீவிர பக்தராக விளங்கினார். இக்கோபுரமானது இந்தியாவின் உயரத்தில் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.

மேலும் இக்கோயில் சிவன் பார்வதிக்காக இந்தியாவில் கட்டப்பட்ட மிக பெரிய கோயில் என்று வரலாறு கூறுகிறது. மற்றும் ஒரு சிவன் பக்தரான பல்லாலா இக்கோயிலுக்காக பலகட்டிடங்கள்கட்டி கொடுத்துள்ளார். இவர் செய்த உதவியை சிவனடியார் பாராட்டும் விதத்தில் பல்லாலா இறைவனடி சேர்ந்த பின்பு சிவபெருமானே வந்து இம்மன்னருக்கு வாரிசு இல்லை என்றதால் அவரே இறுதி சடங்குகள் செய்தார் என வரலாறு கூறுகிறது.

சிவனடியார் இங்கு அக்னி வடிவத்தில் உருவான மற்றொரு வரலாறு சுவாரசியமான புராணம். ஒரு தருணத்தில் பிரம்மா மற்றும் விஷ்ணுவிற்கு வாக்குவாதம் ஏற்பட்டு உச்சத்தை எட்டிய நிலையில், சிவன் இதற்கு ஒரு முடிவை எடுத்துரைக்க அக்னி வடிவத்தில் தோற்றமளித்து விஷ்ணுவையும், பிரம்மாவையும் சிவனுடைய கால்கள் மற்றும் சிரசத்தை கண்டுபிடிக்க சவால் விடுத்தார். இந்த சவாலை ஏற்ற பிரம்மா மற்றும் விஷ்ணு தோல்வியடைந்தனர். இந்த போட்டியில் பிரம்மா ஜெயிக்க சிவனிடம் பொய் சொல்லி விட்டார். இதனால் கோபமடைந்த சிவன் பிரம்மா விற்கு சாபம் கொடுத்தார்.

இந்த சாபத்தினால் பிரம்மாவிற்கு இந்தியாவில் எந்த இடத்திலும் கோயில் இல்லை. இதனால் பிரம்மாவை யாரும் எந்த கோயிலிலும் சென்று வணங்க முடியாத நிலைஉள்ளது. இன்று திருவண்ணாமலையில் சிவனடியார் அக்னியாக வழிபடுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக உள்ளது. ஆதலால் இது ஒரு பஞ்சபூத ஸ்தலமாக தமிழ்நாட்டில் திகழ்கிறது.



# பொம்பள என்றால் இளக்காரமா?




மதம், சாதி, குடும்பம், வறுமை என ஒவ்வொரு காலகட்டத்திலும் முளைத்து, கிளை பரப்பிய தடைகளை முறியடித்துதான் பெண் கல்வி சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் வளர்ச்சியைத் தொட்டது. அதிலும் தலித் பெண் குழந்தைகளின் உயர் கல்வி இந்த நூற்றாண்டிலும் எட்டாக் கனியாகவே இருந்துவருகிறது. அனிதாவின் மரணத்தையொட்டி அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த பல்லாயிரக்கணக்கில் மக்கள் குழுமூரில் திரண்டனர். கழிவறை, குளியலறை உள்ளிட்ட எந்த அடிப்படை வசதியுமில்லாத அனிதாவின் வறுமை நிறைந்த வீடும் அனிதாவின் உடலுக்கு முன்னால் நின்று கதறித் தீர்த்த அந்தக் கிராமத்து மக்களின் அழுகையும் எல்லோரையும் மிகவும் பாதித்தன.

ஊடகத்தின் கேள்விகளுக்கு மெல்லிய குரலில் யதார்த்தத்தோடும் உண்மையோடும் கிராமத்து மாணவிக்கே உரிய எளிமையோடும் அனிதா அப்போது பதில் சொல்லிக் கொண்டிருந்தார். கைநீட்டிப் பிடிக்க முற்படும்போது இறகுகள் விரித்து படபடக்கும் பட்டாம் பூச்சி போல் ஒவ்வொரு வார்த்தைக்கு இடையிலும் அவரது கண்ணிமைகள் படபடத்துக் கொண்டிருந்ததைத் தொலைக்காட்சியின் நேர்காணலில் காண முடிந்தது. மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன், மாநில முதலமைச்சர் உட்பட பலர் கொடுத்த வாக்குறுதியின்படி நீட் தேர்வுக்கு எப்படியும் விலக்கு கிடைத்துவிடும் என அனிதா காத்திருந்தார்.

இறுதியாக நீதிமன்றமும் கைவிட்ட சூழ்நிலையில்தான் அனிதா மனம் உடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டார். 1176 மதிப்பெண்கள் பெற்றும் அவரது மருத்துவக் கனவு நனவாகாமலேயே எரிந்து சாம்பலானது. அனிதாவின் அகால மரணம் தமிழகத்தை மட்டுமல்ல இந்தியாவையே உலுக்கியது. நீட் தேர்வும் மத்திய மாநில அரசுகள் கொடுத்த வாக்குறுதிகள் பொய்த்துப்போனதுமே அதற்குக் காரணங்கள்.

அனிதாவின் மரணத்துக்கு நியாயம் கேட்டு அவரது உயிரைப் பறித்த நீட்டை ரத்து செய்யக்கோரிய மாணவர்களின் போராட்டம் தமிழகமெங்கும் வியாபிக்கத் தொடங்கியது. அதைத் திசை திருப்பும் நோக்கோடு நீட்டை ஆதரித்தும் அனிதாவின் மரணத்தை சிபிஐ விசாரிக்க வேண்டுமெனவும் ஊடகங்கள் வழியாக விவாதங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. அதிலும் குறிப்பாக அனிதா நீட் தேர்வில் தோற்றுவிட்டதால் அவருக்கு மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கான தகுதியில்லையென்றும் நீதிமன்றத்தின் வழியாக அனிதாவின் உரிமையைப் பெற உதவ முன்வந்தவர்கள்தான் அவரது மரணத்துக்குக் காரணமானவர்கள் என்று டாக்டர் கிருஷ்ணசாமி போன்ற தலைவர்கள் பிரச்சாரத்தை நடத்தியதும் பெரும் வேதனையைத் தந்தன.

இதன் பின்னணியில்தான் 2015-ல் தமிழக சட்டமன்றத்தில் நடந்த நிகழ்வொன்றை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தேன். மறைந்த



முதலமைச்சர் ஜெயலலிதா, டாக்டர் கிருஷ்ணசாமியின் மகளுக்கு மருத்துவ மேற்படிப்புக்கு சீட் வழங்கினார் என்பதை அன்றைய நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சட்டமன்றத்தில் தெரிவித்திருந்தார். தமக்கென்றால் ஒரு நீதி அனிதாவுக்கென்றால் இன்னொரு நீதியா என்ற எனது கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்ல முடியாதவர், “அந்தப் பொம்பளை யாரென்றே எனக்குத் தெரியாது” என்று ஊடகத்தில் மறுப்பு தெரிவித்தார்.

“உங்களைப் போன்றே பொதுச்சேவைக்கு வந்த ஒரு பெண்ணை பொம்பளை எனச் சொல்லலாமா?” என்ற ஊடகத்தாரின் கேள்விக்கு மீண்டும் அவர், “பொம்பளையைப் பொம்பளை என்று சொல்வதிலே என்ன தவறு? அது அழகான தமிழ் வார்த்தைதானே” என்றார். அதே தூய தமிழ் வார்த்தையைப் பயன்படுத்தி, “அந்தப் பொம்பளையிடம் நான் சீட் வாங்கவில்லை” என ஏனோ அவர் சொல்லவில்லை. அதன் அரசியல் நமக்குப் புரியாமலும் இல்லை.

அந்தக் கேள்வியோடு நிறுத்தாமல், “பிறகு அந்தம்மா பொம்பளை இல்லையா?” என அடுத்த கேள்வியையும் தொடுத்தார். இதை விடக் கூர்மையான ஆயுதம் வேறு இருந்து விட முடியாதுதான். நிகழ்ச்சித் தொகுப்பாளர் அசந்தே போனார். இத்தனை நெருக்கத்தில் ஆணாதிக்கத்தின் விஷ அம்பை அவரும் எதிர்கொண்டிருந்திருக்க மாட்டார். ஒரு அரசியல் கட்சியின் முக்கியத் தலைவரிட மிருந்து இப்படியொரு கேள்வியை யாரும் எதிர்பார்க்கவில்லை. போர்க்களத்தில் எனது ஆயுதம் பறிக்கப்பட்டதைப் போன்ற அனுதா பத்தோடும் இரக்கத்தோடும் பலரது பார்வை யும் இருந்தது. அதே நேரம் எனக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

குடும்பத்தில் மட்டுமல்ல பெண்கள் அரசி யலுக்கு வந்தாலும் அங்கேயும் அடக்கமானவர் களாக இருக்க வேண்டும் என்றே உலகம் எதிர் பார்க்கிறது. அடக்கமானவர்கள் எல்லாம் சுடுகாட்டில்தான் இருப்பார்கள். அந்த அடக்கம் தேவையற்றது. டாக்டர் கிருஷ்ண சாமி என் எதிரியல்ல, நாவடக்கம் தேவை என என்னை மட்டுமல்ல ஒட்டுமொத்த பெண்களையும் எச்சரிக்கிறார். அது அவரது குரல் அல்ல, மனுவின் குரல். ஆகவே, அவரது கருத்தை எதிர்க்கிறேன்.

அது எங்கே, எப்படி, யாரிடத்தில் ஒலிக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. ஒலிக் காதவரை அது பெண்ணுரிமைக்கு ஆதரவான குரலாகவே நாம் எடுத்துக்கொள்ள வேண்டி யுள்ளது. பெண்ணுரிமை கிடைத்துவிட்டது என்று சொல்வதோ அதற்கு நேர்மாறாக ஆணா திக்கமே வளர்ந்திருப்பதாகக் கருதுவதோ உண்மையான மதிப்பீடாக இருக்க முடியாது. இந்தச்சம்பவத்தில் பெண்ணுரிமை புரிதலோடு ஆதரித்து, கருத்துச் சொன்னவர்களில் இளைய வர்கள், பொதுமக்கள், குறிப்பாகப் பெண்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்திருக் கிறது. இது வரவேற்கத்தக்கது.

‘அனிதா அக்காவுக்கு நியாயம் வழங்கு’ என காரை மறித்து நடுரோட்டில் அமர்ந்து போராடிய நுங்கம்பாக்கம் மாணவிகளும் முடியைச் சுழற்றிப் பிடித்து வேனில் ஏற்றிய போலீசை எதிர்த்து ‘மெரினா நினைவிடத்தில் போராட எங்களுக்கு உரிமையில்லையா?’ எனக் கேட்ட எஸ்.எஃப்.ஐ. மாணவிகளும் வீடு தேடிச்சென்று கைதுசெய்யப்பட்ட மாணவி மஞ்சுளாவும் நீட்டுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்துக்கொண் டிருப்பது பெரும் நம்பிக்கையைத் தருகிறது.

**பொம்பளை என்றால் பொம்பளை அல்ல. போராட்டம் என்பதே அதன் பொருளாகும் என மாணவிகள் உணர்த்திக் கொண்டிருக்கிறார்கள். எந்தவொரு பெண்ணுக்கு எதிராக வும் எங்கே அநீதி நிகழ்ந்தாலும் சாதி, மதம், அரசியல் வேறுபாடின்றி தடியைச் சுழற்றித் தட்டிக் கேட்பதற்கு ஒரு தந்தை பெரியார் நிச்சயம் வேண்டும்.**

**- ரமேஷ்குமார்**



## கவிதை கதம்பம்

# சித்தாந்தம் புதியது!

நிழல் தேடாதே
உன் நிழலில்
ஒரு ஊரையே நிற்க வை!

மகிழ்ச்சியாய்ச்
சிரி கவலைகளைப்
பிய்த்துக் காற்று மண்டலத்துக்கு
அப்பால் வீசு!

எதைக் கண்டும்
பிரமிக்காதே பிரமிப்பைபோல்
ஒரு பின்னடைவே கிடையாது!

தோல்வி என்பது
சிந்திக்கத் தெரியாதவனின்
சித்தாந்தம்!
நிலவை தொட்டது
மூன்று தோல்விக்கு பிறகுதான்

நீ எழுந்தால் ஒரு
எட்டு வந்து பார்க்காதவன்
நீ விழுந்தால்
விழுந்து விழுந்து
விசாரிப்பான் கவனி!

இளைஞனே இரைப்பையும்
நம்பிக்கையும்
காலியாக விடாதே

நடக்குமா என்ற கேள்வி
உன் நம்பிக்கை கோபுரத்தின்
அஸ்வாரத்தில் விழுந்த கடப்பாரை

உலகை உலுக்கி உலுக்கி
எடுத்தவனெல்லாம்
துவக்கத்தில் ஒரு தூசு
படலமாக இருந்தவர்கள்தான்

**- கவிஞர் நிவேதிதா**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. **A. MOURIYAN,**

# வாழ்த்துகள்...



தினம் தினம் ஒரு சிந்தனை கொடுத்து
பரபரப்பு ஏதுமின்றி
கூச்சல்களின் கூவுதளமாய் கிடந்த
இந்த சமூகத்தை மாற்ற புறப்பட்ட ஏவுகணையே!

தராசின் தட்டுகளைப் போல் எப்போதும்
சமநிலை சமானம் காத்திடும் ஏற்றமிகு மேதையே!
திரியில் வந்து தெறித்து விழும்
மறுமலர்ச்சியை குத்தகைக்கு எடுத்திருக்கும் நிபுணரே!

வம்பு பேசி சிண்டு முடிந்து கவிதையில் கலாய்க்கும் கோமானே!
சிலேடை வார்த்தை கொடுத்து நித்தமும் கலக்கும் வித்தகரே!
அடுக்குத்தொடர், இடக்கரடக்கல் அத்தனையும்
கைக்குள் வைத்திருக்கும் மக்கள் விசாரணையின் ஆசிரியரே!

தட்டிக் கொடுத்து சுற்றம் வளர்க்கும் பண்பாளரே!!!
வெளிப்படையான கருத்துக்கள் கொடுத்து
எங்களை அண்ணாந்து பார்க்க வைத்த மவுரியப் பேரரசே!

நீங்கள் பெற்ற இந்த கௌரவத்தின் அடையாளம்
எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு எழுச்சி களம்..!
இதுபோல் இன்னும் பல விருதுகள், பட்டங்கள்
உங்கள் வாசல் தட்டட்டும்...!


ஆறாண்டு கடந்து
சாதனை படைத்திருக்கும் நல்லவரே
ஆயிரங் குறிக்கும் ஆனந்த தாண்டவம் உங்களுக்கு
அத்தனையும் அச்சில் ஏறிய ஆனந்தக்களிப்பு எங்களுக்கு.

பல்லாயிரம் பதிவுகள் இன்னும் உதித்து
பல பட்டங்கள் பெற
பணிவோடு வாழ்த்துகிறோம்.









தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்
காஞ்சிபுரம் மாவட்டம்.

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

